செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை



அரசு..

சிலம்பு-௫௪] வள்ளுவர் ஆண்டு-௨௦௧௦ மார்கழி, Jan. 80 [பரல்-௫.

'செந்தமிழ்ச் செல்வி'

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

"செந்தமிழ்ச் செல்வி"

ஆண்டுக் கையொப்பம்

(Subscription Rates)

உள்நாடு ரூ. 12 00 வெளிநாடு ரூ. 20 00

ஆயுள் கையொப்பம்

உள்நாடு ரூ. 120 00 வெளிநாடு ரூ. 200 00

15-1-80

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ருச	திருவள்ளுவர் ஆண்டு உ௦௧௦, மார்கழி சனவரி 1980	பரல் ரு

தமிழ் இசைச் சங்கத் தோற்றமும் வளர்ச்சியும்

தமிழ்நாட்டில் தமிழ் இசை மேலும் வளரவேண்டும் என்ற நோக்கத்தோடு அண்ணாமலையரசர் அவர்களாலும் அவர்கள் வேண்டுகோட்கிணங்கிய நன்மக்கள் பலர் நன்முயற்சியாலும் தமிழிசைச்சங்கம் 1943 ஆம் ஆண்டில் சென்னையில் நிறுவப் பெற்றது. சங்ககாலத்திலும் அதற்கு முன்னரும் பின்னரும் வளர்ந்த தமிழிசை பிற்காலத்தில் தமிழ்மன்னர்களின் மறைவிற்குப்பின், தமிழகத்தில் வேற்றுமொழிமக்களின் ஆட்சி தலையெடுத்தபோது சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டே வந்தது.

வேற்றுமொழிகள் காலந்தோறும் தமிழ்நாட்டில் சிறிது சிறிதாகச் செல்வாக்குப்பெறலாயின. வேற்றுமொழிமன்னர்களின் ஆட்சிகள் வந்தபோதெல்லாம் அவ்வம்மொழிகளே செல்வாக்குப் பெற்றன. அவர்கள் நாட்டு இசைகளே மன்னரவைகளில் பெருமையோடு சிறப்பிக்கப்பெற்றன. தமிழ்மன்னர்கள் இல்லாத காலத்தில் தமிழ் இசையைப் பாராட்டுவார் நாளுக்குநாள் குறைந்து போயினர். குறுநிலமன்னர்களும், பெருநிலக்கிழார்களும், நாடாளும் பேரரசு, எந்தமொழியை, எந்தமொழி இசையை விரும்புகின்றதோ அதனையே தாமும் விரும்பிப் பாராட்டுவாராயினர்.

கிருட்டிணதேவராயர் முதலிய விசயநகர மன்னர்கள் காலத்தில் தெலுங்கு இசை தமிழ்நாட்டில் பரவியது. மராட்டிய மன்னர்கள் காலத்தில் மராட்டியர் இசைவந்து பரவியது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் ஆங்கில இசை செல்வாக்குப் பெற்றது. இப்படி வேற்று மன்னர்கள் பாராட்டி வளர்த்த காரணத்தால் ஓங்கிவளர்ந்த

பிற இசைகள் தமிழகத்தில் மேலும் மேலும் ஓங்கிவளரலாயின. தமிழர் செல்வாக்கிழந்து தம் கலைகளையும் இசையையும் போற்றி வளர்க்க வாய்ப்பின்றி மங்கிக்கிடந்தார்கள்.

இடையிடையே தேவார ஆசிரியர்களும் நாலாயிரம் பாடிய ஆழ்வார்களும் வளர்த்த தமிழிசையும் பிற்காலத்தில் ஒளிமங்கிக் கிடக்கும் நிலையடைந்தது.

இசையறிஞர்கள் இசையரங்குகளில் இறுதியில் மட்டுமே சில தமிழ்ப்பாடல்களைப் பாடி அந்த அரங்கினை முடிக்கும் வழக்கத்தினை மேற்கொண்டனர். மேலும் பல தமிழிசைப் பாடல்களைக் கேட்கவேண்டும்; முழுவதும் தமிழிலேயே கேட்கவேண்டும் என்று எண்ணுகின்ற தமிழ்ப்பெருமக்களுக்கு அத்தகைய வாய்ப்பு ஒன்றும் எய்தாமலே இருந்தது.

இவற்றையெல்லாம் எண்ணிவருந்திய தமிழ்ப்பெருமக்கள் பலர் முனைவர் அரசர் அண்ணாமலையவர்களுடைய கருத்தையும் அறிந்து தமிழிசைச்சங்கத்தைத் தோற்றுவிக்க வேண்டுமென எடுத்துக் கூறினார்கள். தமிழ்ப் பெருமக்கள் பலருடைய உள்ளத்திலும் நிறைந்து கிடந்த இந்த உணர்வு பெருகிவளர்ந்தபோது அண்ணாமலையரசர் ஆதரவு அளித்துத் தமிழிசைச்சங்கத்தை 1943-இல் தோற்றுவித்தார்கள்.

அதற்குப்பின் பம்மல் சம்பந்த முதலியார் முனைவர், திரு. ரா. க சண்முகஞ்செட்டியார், திவான்பகதூர் தி, மூ. நாரயணசாமிப் பிள்ளை, டி. கே. சிதம்பரநாத முதலியார், திரு. வி. க. முதலாகப் பெருமக்கள் பலர் ஆதரவு தந்து துணை நின்று வளர்த்தார்கள்.

தமிழிசைச்சங்கம் ஆண்டுதோறும் ஆண்டு விழாவின் தொடக்க நாளில் தமிழிசையில் தேர்ச்சிபெற்ற பெரும்புலவர் ஒருவருக்கு "இசைப்பேரறிஞர்" என்னும் பட்டம் அளித்துப் பாராட்டிவருகிறது.

1957 ஆம் ஆண்டு முதல் திரு எம். எம். தண்டபாணி தேசிகர், திரு. பி. சாம்பமூர்த்தி அய்யர், சித்தூர் திரு. சுப்பிரமணிய பிள்ளை, திருமதி எம். எல். வசந்தகுமாரி முதலாக இதுவரை 23 இசையறிஞர்கள் 'இசைப்பேரறிஞர்' என்னும் பட்டம் பெற்றனர். இவ்வாண்டு (1979) இராமநாதபுரம் திரு. சி. எஸ். முருகபூபதி அவர்கள் இசைப்பேரறிஞர் என்னும் சிறப்புப்பட்டம் பெற்றனர். அவர்க்குக்கழகத்தின் வாழ்த்துக்கள் உரியனவாகுக.

பண்ணுராய்ச்சி:

தமிழ்ப்பண்களும் கருநாடக சங்கீதமும் வேறு வேருனவையா? அல்லது தமிழிசையே மாறி இப்படி வழங்குகிறதா? என்ற வினு எழுந்தது. அப்பொழுது பண்ணுராய்ச்சிக்குழு ஒன்றைத் தோற்றுவித்து அதன் மூலம் உண்மை காணவேண்டு மென்று அறிஞர் பலர் விரும்பினர். தமிழிசை இயக்கம் செய்ய வேண்டிய அரிய பணி அது என்று முடிவாயிற்று. அதனுல் 1949ஆம் ஆண்டில் 'பண்ணுராய்ச்சிக் குழு' தோன்றியது. ஆண்டு தோறும் நான்குநாட்கள் பண்ஆராய்ச்சி நடைபெறுகிறது. பண்டைக்கால நூல்களில் கண்ட, இசை, கூத்து வகைகளைப் பற்றிய விளக்கங்களும் ஆராயப்படுகின்றன. ஆராய்ச்சி செய்த கருத்துக்களை ஒவ்வோராண்டும் மலர்வடிவில் வெளியிட்டு வருகிருர்கள்.

பண் ஆராய்ச்சியின் முப்பதாம் ஆண்டுக்கூட்டம் நடைபெற்ற பொழுது இசைப்பேரறிஞர் கலைமாமணி திரு. சி. எஸ். முருக பூபதி அவர்கள் நாட்டிய நாடகங்களின் வளர்ச்சிக்குக் குறிப்பிட்ட செய்திகள் சிறப்புடையன. அவற்றை இங்குக் காணலாம்.

''பண் ஆராய்ச்சியின் சாதனைகளில், நாட்டியப்பகுதி சிறப்பிடம் பெற்றுத் தாள வழிபாட்டுக்கு வசதிகள் கிடைத்துள்ளன. மறைந்துவிடாமல் பல குறவஞ்சி நாடகங்கள் புத்துயிர் பெற்று முத்தமிழுக்குச் சேவை செய்து வருகின்றன. குறவஞ்சி நாடகங்களுக்கு அரிய பாடுபட்டு அமைத்துவரும் இசையுடன் ஆராய்ச்சி மலரில் வெளிவருவது நிரந்தரப் பயன்தரும்; மீண்டும் அந் நாடகங்கள் நடைபெற வசதியாகும். இல்லையேல் அவை மீண்டும் மறைய நேரிடும்.

''சில ஆண்டுகளுக்குமுன் புத்துயிர் பெற்றுத் தமிழிசைச்சங்கப் பண் ஆராய்ச்சி மேடையில் நவசந்திகானம் ஒலித்தது. நாட்டியங்களும் மீண்டெழுந்தன. அவை பண்டைய முறைப்படி கோயில்களில் நடைபெற இன்று வசதி கிடையாது. விழாக் காலங்களில் ஓர் உளுத்துப்போன மிருதங்கமும் தாளமும் மட்டும் ஒலித்துக்கொண்டு, ஆண்டவனுடைய திருவுலாவில் வேண்டா வெறுப்பாகக் காட்சியளிப்பதைக் காணலாம். வழிபாட்டுச் சடங்கு இசையின்பமாகவும், இசையறிவுப் பாடமாகவும் ஆண்டவன் திருமுன் புத்துயிர் பெறவேண்டும்.''

— — —

தமிழிசைச் சங்க
முப்பத்தேழாம் விழா

சென்னைத் தமிழ் இசைச்சங்கத்தின் 37-ஆம் விழா, இராசா அண்ணமலை மன்றத்தில் திசம்பர் 21 ஆம் நாள் தொடங்கி 1—1—80 முடிய மிகச்சீரும் சிறப்புமாக நடைபெற்றது. விழா நிகழ்ச்சிகள் வருமாறு :

தமிழிசைச் சங்கத் தலைவர் முனைவர் நீதிபதி எஸ். மகராசன் அவர்கள், நிகழ்த்திய வரவேற்புரைச் சுருக்கம்.

தமிழ் இசைக்கு இரண்டு டைனமோக்களாக விளங்குகின்ற சகோதரர்கள் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களே! உயர் திரு எம். ஏ. சிதம்பரம் அவர்களே! இசைவாணர்களே! தமிழ் அறிஞர்களே! நம் மதிப்பிற்கு உரிய ராஜா சர் அண்ணமலை செட்டியார் அவர்கள், ரசிகமணி டி. கே. சி. அவர்களின் உட்பலத்தோடும், ராஜாஜி கல்கி ஆகியோரின் ஆசியோடும் தமிழ்இசை இயக்கத்தைத் தொடங்கி முப்பத்து ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. தமிழ் இசைச் சங்கத்தின் முப்பத்து ஏழாம் ஆண்டுவிழா, இப்போது தொடங்குகின்றது. இவ் விழாவினைத் தொடங்கி வைப்பதற்கு எல்லா வகையிலும் பொருத்தமுடைய ஒரு கலைஞரை நாம் பெற்றிருக்கின்றோம். அந்தக் கலைஞர் யார்? கலையையே மூச்சாகக் கொண்டு தமிழிலுள்ள இயல் இசை நாடகங்களின் பெருமைகளையெல்லாம் உலகத்திற்கே எடுத்துக்கூற வேண்டும் என்று கச்சை கட்டிக்கொண்டு இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள். இவர்கள், சிறந்த செயல்வீரர்.

இவர்கள் எண்ணத்தினைச் சொல்லிலே இறக்கிவிடுவார்கள். மேலும் உடனுக்குடன் சொல்லுக்குச் செயலுருவம் கொடுப்பதிலும் திறமைமிக்கவர்கள். இவர்களைத் தமிழ் இசைச்சங்கத்தின் சார்பில் மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன்.

இந்த ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்க இருக்கும் திரு. முருகபூபதி அவர்கள், மிகச்சிறந்த மிருதங்கக் கலைஞர். சிலர் மிருதங்கத்தைத் தம்பட்டமாகவும், டமாரமாகவும் வாசிப்பார்கள். ஆனல் திரு. முருகபூபதி அவர்களோ, தாள ஒலிகள் கொஞ்சி விளையாடி நம்மையெல்லாம் மயக்கும் ஒரு கந்தர்வலோகக் கருவியாக

மிருதங்கத்தை அடக்கி இயக்குவார்கள். நேற்றுத்தான் நம் இந்திய நாட்டின் குடியரசுத்துணைத்தலைவர் மாண்புமிகு இதய துல்லா அவர்கள், "மிருதங்கம் என்பது தமிழ்நாட்டிலேயே கண்டு பிடிக்கப்பட்ட இசைக்கருவி. திருவாரூரிலே, திருவானைக்காவிலே, சிதம்பரம்-நடராசர் கோவிலிலே உள்ள சிற்பங்களிலெல்லாம் மிருதங்கத்தைப் பார்க்கின்றோம். இது தமிழன் கண்டுபிடித்தது" என்று கூறினார்கள். இவ்வாறு அவர்கள் கூறியதில் தமிழர்களுக்கே ஒரு பொருமை. தமிழர்களுக்கு இவ்வளவு பெருமை கொடுக்கிறாரே என்று தமிழர்களுக்கே ஒரு வயிற்றெரிச்சல். இத்தகைய மிருதங் கத்தை நம் முருகபூபதி அவர்கள் இயக்குகின்றபோது, அந்தக் காலத்தில் இருந்த அழகியநம்பி அவர்களுடைய மிருதங்கத்தைக் கேட்கின்ற இனிய மென்மையான இன்பம் செவிகளுக்குள்ளே புகுந்து, உள்ளத்தைத் துழாவி, உயிருக்கே இதம் செய்கின்றது. இராமநாதபுரம் சேதுபதி சமஸ்தானம், பல நூற்றாண்டுகளாக இசையை வளர்த்து வந்திருக்கின்றது. அந்தச் சமஸ்தானம் ஏற் படுத்திய சூழ்நிலையில் வளர்ந்தவர்கள் திரு. முருகபூபதி அவர்கள். அவர்களுடைய நுண்புலமையை மெச்சி நமது தமிழ் இசைச் சங்கம், அவர்களுக்கு 'இசைப்பேரறிஞர்' என்ற பட்டத்தை இப் போது நல்க இருக்கின்றது. அதனை ஏற்றுக்கொள்ளவும் விழா விற்குத் தலைமைதாங்கவும் இசைந்த அவர்களுக்குச் சங்கத்தின் சார்பில் நல்வரவு கூறுகின்றேன்.

தமிழ் இசை இயக்கம் பிறந்து ஏறத்தாழ மூன்று "மாமாங் கங்கள்" ஆகிவிட்டன. ஆகியும் தமிழ் இசையை இன்னும் முழு மனத்துடன் ஏற்றுக்கொள்ளாத பல தமிழ்க் கலைஞர்கள் தமிழ் நாட்டிலே இருந்து வருகின்றார்கள். நாட்டியக் கலையை உலகிற்கே தந்தது, தமிழ்நாடுதான். அந்தக் கலையைத் தமிழனுக்குச் சொந் தமில்லை என்றும் அது காஷ்மீரத்தில் இருந்து இறக்குமதி செய் யப்பட்டது என்றும் சொல்லி நம்முடைய அரிய கலையைக் காஷ் மீருக்கு அடமானம் வைக்கப் பார்க்கின்றார்கள் தமிழர்கள். நாம் கவனமில்லாமல் இருந்துவிட்டால், அந்தக் கலையைச் சர்வ சுதந்திரபாத்தியத்தோடு விலைக்கு விற்கவே செய்துவிடுவார்கள் நம் முடைய தமிழர்கள். நடனக்கலைஞர் ஒருவர் நடனக்கலையைப் பற்றி ஆய்வுரை எழுதி ஒரு பல்கலைக்கழகத்தில் அண்மையில் 'டாக்டர், பட்டம்' வாங்கியிருக்கின்றார். அவருடைய பெயரைச்சொல்ல நான் விரும்பவில்லை. அவருடைய கலைத்திறத்தை நான் மிகவும் பாராட்டுபவன். அவர் சிறந்த நடனக்கலைஞர் என்பதனை உணர்ந்து பாராட்டுகின்றவன் நான். ஆனால், அவர் வேண்டாத வரலாற்று ஆராய்ச்சிக்குள்ளே புகுந்து பரதநாட்டிய சாத்திரம் காசுமீரத்துப் பிராமணர் ஒருவரால் எழுதப்பெற்றது என்றும் காசு

மீரத்தில் இருந்துதான் அது தமிழ்நாட்டிற்கு இறக்குமதி ஆகி யிருக்கிறது என்றும் அந்த ஆய்வுரையிலே எழுதியிருக்கின்றார்.

இவ்வாறு அவர் எழுதியிருப்பது மாத்திரமன்று 'சுயராஜ்யா' என்ற பத்திரிகையில் இந்த அரிய கண்டுபிடிப்பைப் பற்றி மதிப் புரை வழங்கியிருக்கிறார் இன்னொருவர். அவரும் தமிழரே. அவர் என்ன சொல்லுகிறார்? Fortunately, so and so, has proved that Bharta Natya originated, not in Tamil Nadu, but in Kashmir. அஃதாவது, "பரதநாட்டியம் தமிழ்நாட்டில் பிறக்க வில்லை; காசுமீரில்தான் பிறந்தது என்று நூலாசிரியர் நிலைநாட்டி விட்டார்; இப்படி நிலைநாட்டியது நம்முடைய அதிர்ஷ்டம்" என்று சொல்லி அவர் கும்மாளம் போடுகிறார்; கொட்டம் அடிக்கிறார். வேறு எந்த நாட்டிலும் இப்பேர்ப்பட்ட பிறவிகளைக் காணமுடியாது.

அங்கு நான் சென்றிருந்தபோது பேராசிரியர் புஷ்ப் (pushp) என்பவர், அங்கே வந்திருந்தார். அவர் சிறந்த புதைபொருள் ஆராய்ச்சியாளர். வடமொழி விற்பன்னர். அரபுமொழி அறிஞர் களும் பாரசீக மொழி அறிஞர்களும் கூடியிருந்த அந்த அவையில் பேராசிரியர் புஷ்ப் அவர்களைப் பார்த்து, நாட்டியக்கலை என்பது காசுமீரத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்தது என்று தமிழர் ஒருவர் கூறுகிறாரே, அது உண்மையா? என்று கேட்டேன். உடனே புஷ்ப் அவர்கள், "இது அபத்தம்; எங்களுக்கும் பரதநாட்டியக்கலைக் கும் ஸ்நாநப் பிராப்தியே கிடையாது; சம்பந்தமே இல்லை" என்று குறிப்பிட்டார். உடனே நான், இவ்வாறு சொல்லுவதற்குச் சான்று இருக்கிறதா என்று அவர்களைக் கேட்டேன். அவர் அடுத்தநாள், கருத்தரங்கிற்கு வந்தபோது, தொன்மையான வடமொழி நூலி லிருந்து ஒரு ஸ்லோகத்தை எழுதிக் கொண்டுவந்து என்னி டம் கொடுத்தார். அதனை இங்கே கொண்டுவந்திருக்கிறேன். 'Photostat copy' வேண்டுமானால் எடுத்துக் கொள்ளுங்கள். அந்த ஸ்லோகம் சொல்லுகிறது: 'தாக்ஷிணாத்யாகா; பகு கீத ந்ருத்ய விஷாரதாகா;" அதாவது, "தென்னாட்டில் உள்ளவர்கள் இசை யிலும் நாட்டியத்திலும் மிகுந்த திறமை பெற்றவர்கள்" என்று பொருள். அதற்குமேல் என் நண்பர் சமஸ்கிருத சிரோமணி, டாக்டர் பட்டமும் வாங்கப்போகிற தேவநாதன் அவர்கள் நேற்று ஒரு கருத்தினை என்னிடம் சொன்னார்கள். பாகவதத்தில் ஒரு செய்தி கூறப்பெற்றிருக்கிறதாம், அஃதாவது கலிகாலத்தில் ஞானி களோ கலைஞர்களோ எங்கே பிறப்பார்கள் என்றால், தாம்பிரபரணி நதிதீரத்தில், வைகை நதிதீரத்தில், பாலாற்றங்கரையில், காவேரிக் கரையில் பிறப்பார்கள் என்று பாகவதத்தில் குறிப்பு இருப்பதாக அவர்கள் என்னிடம் சொன்னார்கள். இது சரிதானே தேவநாதன்

(கூட்டத்திலிருந்த திரு. தேவநாதன், ' இது முழுக்க முழுக்க உண்மை'' என்று எழுந்து நின்று சொன்னார்) ஸ்ரீமத் பாகவதம் நமக்கு இப்படிப் பெருமை கொடுக்கிறது. அதை எதிர்ப்பது பாவம்.

காஷ்மீரத்தில் அபிநவ குப்த என்பவர் பரதநாட்டிய சாஸ் திரத்திற்கு ஒரு வியாக்கியானம் எழுதியிருக்கிறார். இதனைக் கொண்டு பரதரும் காஷ்மீரத்தைச் சேர்ந்தவர்; பரதநாட்டியக் கலையும் காஷ்மீரத்தைச் சேர்ந்தது என்று அந்த ஆராய்ச்சியாளர் முடிவு செய்துவிட்டார். கி. பி. 1770இல் இத்தாலிய நாட்டைச் சார்ந்த பெஸ்கி என்பவர் திருக்குறளை இத்தாலியில் மொழி பெயர்த்து அதற்கு வியாக்கியானம் செய்தார். இதனைக் கொண்டு திருவள்ளுவர் ஓர் இத்தாலியன் என்று சொல்லிவிட முடியுமா? 150 ஆண்டுகளுக்கு முன்னால் Dr. Groul என்பவர் ஜெர்மன் மொழியில் திருக்குறளை மொழி பெயர்த்தார். அதனால் திருவள்ளு வரை ஜெர்மானியர் என்று சொல்லிவிட முடியுமா? இவ்வாறு சொன்னால் எவ்வாறு இருக்குமோ அவ்வாறுதான் பரதநாட்டியக் கலை என்பது காஷ்மீரத்திலிருந்து தமிழகத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டது என்று சொல்லுவதும் இருக்கின்றது. அபிநவகுப்த என்பவர் பரதநாட்டியக் கலையைப்பற்றி வியாக்கியானம் செய்தத னால் இக் கலை காஷ்மீரத்தைச் சேர்ந்தது என்று எவ்வாறு சொல்ல முடியும்!

சமீபத்தில் நான்கூடத் திருவள்ளுவரைப் பற்றி ஆங்கிலத் தில் ஒரு நூல் எழுதியுள்ளேன். இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்து, திருவள்ளுவரும் நானும் இங்கிலாந்தில் வாழ்ந்தவர்கள் என்று தமிழ் ஆய்வாளர்கள் சொன்னால், அதில் அதிசயப்படுவதற்கு ஒன்றுமில்லை.

மேலும் பேராசிரியர் புஷ்ப் ஒரு கருத்தைச் சொன்னார்கள் :— "காஷ்மீரத்தில் இருந்து தமிழகத்தை நோக்கி நேரே ஒரு கோடு வரையுங்கள். அந்தக் கோடு செல்லும் பகுதிகளில் எங்கேயாவது பரதநாட்டியக் கலை இருக்கிறதா?'' என்று கேட்டார். மேலும் காஷ்மீரத்தில் பரதநாட்டியக் கலையே இல்லையாம். அவர்களுடைய நாட்டியத்தில் அதன் சாயலும் இல்லையாம். ஆதலால், காஷ்மீரத் துக்காரர்கள் அதனை அறியாதவர்கள் —"Kashmiris are inno-cent of Bharata Natya" என்று பேராசிரியர் புஷ்ப் சொன்னார்.

பரதநாட்டியம் என்ற பெயரே 1930க்குப் பின்னர்தான் ஏற் பட்டது. எனக்கு இது நன்றாகத் தெரியும். அதற்கு முன்னர் இதனைச் 'சதிர்' என்று சொல்லுவார்கள். இஃது ஒரு வகையான

இனத்தாரிடம் அகப்பட்டுக்கொண்டுவிட்டது; ஆகவே இந்தக் கலையை எல்லோரும் கற்க வேண்டும்; உயர்ந்த குடும்பத்துப் பெண்களும் பழக வேண்டும் என்பதற்காகச் சதிர் என்ற பெயரை மாற்றிப் பரதநாட்டியம் என்று நாமகரணம் சூட்டினார்கள். எனவே பரதநாட்டியம் என்றவுடன் இது பரதருக்கே உரிய கலை என்னும் பொருள் வந்துவிட்டது. சதிர் என்னும் பெயர் 200 அல்லது 300 வருடங்களாகத்தான் இக் கலைக்குப் பெயராக அமைந்தது. அதற்கு முன்னால் இக் கலையைக் கூத்து என்றுதான் நாம் குறிப்பிட்டோம். நாட்டியம், நடனம் என்றும் இதற்குப் பெயர் வைத்திருந்தோம்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்கள் ஒரு நாட்டிய அரங்கேற்றத்தில் பேசும்போது "நாட்டியக் கலைக்காகவே ஒரு தெய்வத்தைக் கற்பனை செய்து படைத்தவன் உலகத்திலேயே தமிழன்தான்' என்று அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டார்கள். இஃது உண்மை; நடராசர் விக்கிரகமே தமிழ்நாட்டிலேதான் உண்டு. வேறு எங்கும் இல்லை. நடனத்திற்கு ஒரு தெய்வத்தைக் கற்பனை செய்ததோடு தமிழன் நின்றுவிடவில்லை. அதற்கு ஓர் அடையாள பாஷையையும் வைத்திருந்தான். ஒவ்வோர் அணுவினுள்ளும் பேரணுவினுள்ளும் அண்டத்தினுள்ளும், ஓர் இயக்கம்—ஆண்மையும் பெண்மையும் கலந்த ஓர் இயக்கம் இயங்கிக்கொண்டிருக்கிறது. அதனை இயக்குகிறவன்தான் இறைவன். அவனை நாங்கள் இவ்வாறு உருவகப்படுத்துகிறோம் என்று சொன்னார்கள்.

மாணிக்கவாசகர் 1200 ஆண்டுகளுக்கு முன்னால்,

"உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனிஅமையும்
குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே"

என்று பாடினார். இந்த உலகத்தில், யாராவது கடவுளைப் பார்த்துக் "கூத்தா" என்று சொல்லியிருக்கிறார்களா? 1500 ஆண்டுகளுக்கு முன்னால் பாடப் பெற்ற திருமந்திரத்தில் "உமைகாணக் கூத்து கந்தானே" என்று திருமூலர் பாடியிருக்கிறார்.

நம்முடைய முன்னோர்கள் குருட்டு நம்பிக்கையோடு இறைவனைக் காணவில்லை. "ஆணவமற்ற நிலையில் ஆனந்தம் ஏற்படுகிறது. ஆனந்தமே கடவுள்" என்று உணர்ந்தார்கள். இந்த அற்புத ஆனந்தத்தைத் திருமூலர் மிக அழகாகப் பாடுகின்றார்.

"ஆனந்தம் ஆடரங்கு, ஆனந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல்லியம், ஆனந்த வாச்சியம்

ஆனந்த மாக அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்துகந் தா னுக்கே.''

நான் "ஆடத் தெரியாத கடவுள்" என்று ஒரு புத்தகம் எழுதியிருக்கின்றேன். நீட்ஸ்கே என்பவர் ஒரு பெரும் ஜெர்மன் ஞானி. அவர், கிறித்தவர். அவர், பாதிரியார்களைப் பார்த்து இறைவனைச் சிலுவையில் அறைந்த வடிவத்தோடு வழிபடலாமா? ஆனந்த மூர்த்தியாக வன்றோ அவனைப் பார்க்கவேண்டும்; "ஆடத் தெரியாத கடவுளை நான் நம்பத் தயாரில்லை" என்று சொன்னார். நம் சிதம்பரம் நடராசரை நினைத்துக்கொண்டு அப்படிக் கூறினார். தமிழர்களைத் தவிர வேறெந்த நாட்டவரும் இறைவனை ஆனந்த நடனமாடிக்கொண்டிருப்பவனாகக் காணவில்லை. காஷ்மீரிகளும் காணவில்லை.

சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார் தம் உரையில் "தொல்காப்பியர் காலத்தில் கூத்த நூல் என்று ஒரு நூல் இருந்தது. அது எங்கோ மறைந்து கிடக்கிறது" என்று எழுதியுள்ளார். நல்லவேளையாக அந்த நூல் சாது சுப்பிரமணிய யோகி அவர்களுக்குக் கிடைத்தது. அவர்கள் அந் நூலில் இரண்டு பகுதிகளை வெளியிட்டிருக்கின்றார்கள். அந்த நூலினை வெளியிடுவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்தவர்கள், இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர் ஜஸ்டிஸ் கோகுல கிருஷ்ணன் அவர்கள், அவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களின் பெருமுயற்சியினால்தான் அந்த இரு பகுதிகளும் வெளிவந்தன. எனவே, அவர்களுக்கு என் சார்பிலும் உங்கள் சார்பிலும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். அந்த நூலின் கடவுள் வாழ்த்தில் கூத்தைப் பற்றிய செய்தி வருகின்றது. சிவபெருமான் வெட்டவெளியில், சிதாகாசத்தில், உலகங்களைப் படைப்பதற்கு முன், கூத்தாடியபோது அவனுக்குத் தாளம் கொட்டியது யார்? "எங்கள் உமையம்மையாகத் தானிருக்க வேண்டும்" என்று ஹாஸ்யத்தோடு கூறுகிறார் இக் கடவுள் வாழ்த்தில். கொடுகொட்டி, பண்டரங்கம், காபாலம் என்னும் மூன்று கூத்துக்களைப் பற்றிய செய்தி அப் பாடல்களில் வருகின்றது. பண்டுஅரங்கம் என்பதே பண்டரங்கம் ஆகும்.

''படுபறை பலவியம்பப் பலஉருவம் பெயர்த்துநீ
கொடுகொட்டி யாடுங்கால்
கொடிபுரை நுசுப்பினாள் கொண்டசீர் தருவாளோ''

இந்தப் பாட்டிலுள்ள பக்தியின் ரசனையும் அபூர்வமானது. "நீ கொடுகொட்டி என்ற தாண்டவத்தை ஆடியபோது கொடிபோன்ற

இடையை உடைய எங்கள் அம்மை உனக்குத் தாளம் (சீர்) இசைத்தாளோ'' என்கிருர்.

> பண்டரங்கம் ஆடுங்கால்...
> வண்டரற்றும் கூந்தலாள் வளர்தூக்குத் தருவாளோ !

அதற்கு மேலே வருகிறது இன்னெரு பாடல் :

> 'தலையங்கை கொண்டுநீ காபாலம் ஆடுங்கால்
> முலையணிந்த முறுவலாள் முற்பாணி தருவாளோ !'

இப் பாடல்கள், கி. மு. இரண்டாவது அல்லது மூன்ருவது நூற்ருண்டில் எழுதப் பெற்றவை.

இந்தக் கூத்த நூல், ஒன்பது பகுதிகளைக் கொண்டது. அதில் இரண்டு பகுதிகளைத்தான், இயல், இசை, நாடக மன்றம் வெளியிட்டிருக்கிறது. இன்னும் ஏழு பகுதிகள் இருக்கின்றன. அவற்றிற்குரிய ஓலைச்சுவடிகள், சாது சுப்பிரமணிய யோகியாரின் குடும்பத்தாரிடம் உள்ளன. அவற்றை நம் தமிழக அரசு விலை கொடுத்து வாங்கி வெளியிட வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு வெளியிடுவதற்கு இயல் இசை நாடக மன்றமும் தமிழ் இசைச் சங்கமும் ஒத்துழைக்கும் என்று இந்த நேரத்தில் உறுதி கூறுகின்றேன். அவ்வாறு வெளி வந்தால்தான், பரதநாட்டியக் கலை காஷ்மீரத்திலிருந்து வந்தது என்று சொல்லுகின்றவர்களின் வாய் அடங்கும். இந்தக் கூத்துக் கலை, 3000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் இருந்த கலை. ஆனல், இந்தியாவில் உள்ள எல்லா மக்களும் உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத் தமிழர்கள் அனைத்திந்திய இணைப்பு மொழியாக அமைந்த சமஸ்கிருதத்தில் இக் கலையைப் பற்றி எழுதி வைத்தார்கள். இதனைக் கொண்டு இக் கலை நமக்குச் சொந்த மானது இல்லை என்று கூறுவது சிறிதும் பொருந்தாது. கூத்த நூலில் பல்வேறு செய்திகள் கூறப்பெற்றிருக்கின்றன. அந்த நூலில் 108 தாண்டவ நாட்டிய முறைகள் காணப்படுகின்றன. ஐந்து நிலங்களுக்குரிய கிராமிய நாட்டியங்களும் பேசப்படுகின்றன. கரண நூல் என்று ஒரு பகுதி இருக்கிறது. அதில் 120 கரணங்கள் பற்றிய செய்திகள் கூறப்பெற்றுள்ளன. தாள சமுத்திரம் என்ற கூத்த நூல் பகுதி, 108 தாளங்களைப் பற்றிப் பேசுகின்றது. இப்போது 35 தாளங்களைப் பற்றியே நாம் அறிந்துள்ளோம். அரங்க நூல் என ஒரு பகுதியும் கூத்தநூலில் இருக்கிறது. நாடக மேடை வடிவம் பற்றிய செய்திகள் அந் நூலில் கூறப்பெற்றுள்ளன. மேடையின் ஒளி அமைப்பு எவ்வாறு உணர்ச்சிகளைத் தூண்டிவிடுவதாக—ஒழுங்கு படுத்துவதாக அமையவேண்டும் என்ற செய்தி,

அந்த நூலில் காணப்படுகின்றது. "Sonet lumiere" என்று ஃப்ரெஞ்சுக்காரர்களும், Sound and Light என்று ஆங்கிலேயர்களும் இதைக் கூறுகிறார்கள். நாட்டியத்தின் குறிக்கோளைக் காட்டுகின்ற கண்ணூல் என ஒரு பகுதி, கூத்த நூலில் இருக்கிறது. உடல் வளம், மூச்சு நிலை, மனத்தை அடக்குதல் முதலியன பற்றிய செய்திகள் இந்தப் பகுதியில் கூறப்படுகின்றன. உடலை நன்றாக வைத்துக்கொள்வதற்கு வேண்டிய மருந்துகள், களிம்புகள் ஆகியவற்றைப் பற்றியும் இப் பகுதி பேசுகிறது இவற்றை யெல்லாம் நாம் அறிந்து கொண்டால்தான் உலகத்தில் தலை நிமிர்ந்து நடக்க முடியும். அவ்வாறு தலை நிமிர்ந்து நடப்பதற்காகத்தான் இந்த விழா இங்கே நடக்கிறது. எனவே இந்த முயற்சிக்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று வேண்டுகின்றேன்.

குறிப்பு :

இந்தப் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தவரும், "பரத நாட்டியம் காஷ்மீரத்தில் பிறந்தது" என்று சொன்னவருமான டாக்டர் பத்மா சுப்பிரமணியம் அவர்கள், பல பிரமுகர்களிடம் சென்று, "நான் அப்படிச் சொல்லவேயில்லை" என்று கூறி வருவதாகத் தெரிய வருகிறது; டாக்டர் பத்மா சுப்பிரமணியம் அவர்கள் எழுதி அச்சிட்டு வெளியிட்டிருக்கும் "Bharata's Art Then and Now" என்ற நூலில் 20 ஆம் பக்கத்தில் அவர் கீழ்க்கண்டவாறு சொல்லியிருக்கிறார் :—

"Bharatha's Natya Which emerged from the land of KASHMIR has its deep roots in every part of our Country"

(தமிழாக்கம் :—காஷ்மீரத்தில் பிறந்த பரதநாட்டியக்கலை, இப்பொழுது இந்தியாவின் ஒவ்வொரு பாகத்திலும் ஆழ்ந்து வேரூன்றி நிற்கின்றது.)

தமிழ்நாடு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களின் தொடக்கப் பேருரைச் சுருக்கம் :

தமிழ் இசைச் சங்கத்தின் தலைவர் மாண்புமிகு நீதிபதி மகராசன்; அவர்களே ! இந்த ஆண்டுத் தமிழ் இசைச் சங்கத்தினுடைய இசைப் பேரறிஞர் என்ற விருதினைப் பெறுவதற்காக இங்கே வருகை தந்து இந்த விழாவிற்குத் தலைமையேற்றிருக்கின்ற தமிழகத்தின் புகழ் மிக்க கலைஞர்களில் ஒருவரான திரு முருகபூபதி அவர்களே ! தமிழ் இசை என்பதை ஓர் இயக்கமாக இந்த

நாட்டில் உருவாக்கி முப்பத்து ஏழு ஆண்டுகளாக அந்த இயக்கத்தை அணையாமல் காப்பாற்றி வருகின்ற செட்டிநாட்டு அரசர் குடும்பத்தைச் சார்ந்த பெரியவர்களே !

இன்றைக்கு முப்பத்துஏழாவது தமிழ் இசை விழாவினை நான் தொடங்கி வைக்கின்ற பொறுப்பிலே நிற்கின்றபோது நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்தாலும் பிரியாமல், நம்முடைய உணர்வோடு உணர்வாய்க் கலந்துவிட்ட செட்டிநாட்டு அரசர் அண்ணாமலையார் அவர்கள் தமிழகத்திலே தமிழ் இசையைக் காக்கவேண்டும் என்பதற்காக 1942ஆம் ஆண்டிலே ஓர் இயக்கம் கண்டபோது நான் சென்னையிலே இல்லை. தமிழகத்தினுடைய பல்வேறு நகரங்களிலே காலஞ்சென்ற முத்தமிழ்க் கலாவித்துவ ரத்தினம் ஔவை டி. கே. சண்முகம் அவர்களுடைய நாடகக் குழுவில் பதின்மூன்று அல்லது பதினான்கு வயதுப் பாலகனாய் அல்லது சிறுவனாய் நடித்துக்கொண்டிருந்தபோது இந்தத் தமிழ் இசை இயக்கத்திற்கு ஒரு தொண்டனாக இருந்தேன் என்ற பெருமை எனக்கு உண்டு என்பதனை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்ளுவதில் நான் பெருமைப்படுகின்றேன். எங்கோ இருந்தேன்! சென்னையிலே நடைபெறுகின்றது விழா; இசை மாநாடு. ஆனால் இதனுடைய எதிரொலி, தமிழ் பேசுகின்ற மக்கள் எங்கெல்லாம் வாழ்ந்தார்களோ, அங்கெல்லாம் ஒலித்தது. தமிழர்கள் என்று தம்மை எண்ணிக்கொண்டிருக்கின்ற தமிழர்களின் இதய நாடியைத் தடவிய அந்த இயக்கம், என்போன்ற சிறுவர்களையும் இளைஞர்களையும் அன்றைக்குத் தொட்டது. ஒரு சம்பவத்தைச் சொன்னால், இங்கே இருக்கின்ற இசைப்பேரறிஞர்கள்—பெரும்புலவர்கள் என்னை மன்னித்துக்கொள்ள வேண்டும். காலம் சென்ற இசையரசு தண்டபாணி தேசிகர் அவர்கள் 1942 அல்லது 1943ஆம் ஆண்டிலே அனைத்து இந்திய வானொலியிலே பாடுகின்றார்கள் என்றால், அன்றைக்கு நான் நடிகனாகப் பணியாற்றிக் கொண்டிருந்த அந்த நாடகமன்றத்தில்—நாங்கள் குடியிருக்கின்ற வீட்டில் அல்லது நாடகத்தை நடத்துகின்ற அரங்கில் "இன்றைக்கு இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் வானொலியிலே தமிழ் இசை பாடுகின்றார்" என்று கையினாலே தட்டிகள் எழுதி மாட்டிவைத்து அந்தத் தமிழ் இசையின் உணர்வைப் பரப்ப வேண்டும் என்ற அந்த அற்புதமான உணர்வினுக்கு நானும் என் போன்றவர்களும் எங்களை ஆட்படுத்திக்கொண்டவர்கள்.

இங்கே சிலையாக இருக்கின்ற செட்டி நாட்டு அரசர் அண்ணாமலையார் அவர்கள் இருந்தால், சர் ஆர். கே. சண்முகம் அவர்கள் இருந்தால், இந்தத் தமிழ் இசைக்காகப் பாடுபட்ட பெரு

மக்கள் எல்லாம் இருந்தால், தமிழ் இசையின் மூலம் தமிழ்நாடும் தமிழ்மக்களும் தமிழ்மொழியும் காப்பாற்றப்படும் என்ற அந்த நம்பிக்கையோடு பாடுபட்ட அந்தத் தலைவர்கள் எல்லாம் இருந்தால், இங்கே நம்முடைய நீதிபதி அவர்கள் உரையாற்றினார்கள் என்று நான் சொல்ல விரும்பவில்லை, எடுத்துவைத்தார்களே ஆணித்தரமான கருத்துக்களை—அந்த ஆவேச உணர்வோடு ஆனால் அமைதியாக—அழுத்தமாக—இக் கருத்துக்களைக் கேட்டு அவர்கள் எவ்வளவு மகிழ்ந்திருப்பார்கள். அவர்கள் இல்லையே என்ற ஏக்கம் எனக்கு இப்போது ஏற்படுகின்றது. அண்ணாமலையார் அவர்கள் இந்த இயக்கத்தை ஆரம்பித்தபோது நம்முடைய நீதிபதி அவர்கள் அங்கே நீதிபதியாகவன்றோ இருந்தார்கள்! உள்ளத்திலே பொங்குகின்ற கருத்துக்களை எடுத்துச்சொல்ல முடியாமல் வாய்க்குத் தடைபோட்டு அல்லவா வைத்திருந்தோம்! அதனால் அல்லவா முப்பத்துஏழு ஆண்டுகள் கழித்தும் இன்றைக்கும் நாம் தமிழ் இசைக்காக விழா நடத்தி வாதங்களை நடத்திக்கொண்டிருக்கின்றோம்; நடத்திக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். எங்கே—தமிழ் நாட்டில்? நம்முடைய மொழி என்ன? தமிழ்; நமக்குப் பெயர் என்ன? தமிழர்கள்; நாம் எதற்காகக் கூடியிருக்கிறோம்? தமிழ் இசையைக் காப்பதற்கு. மாண்புமிகு நீதிபதி அவர்களே! பெரியோர்களே! உலகத்திலே வேறு எந்த நாட்டிலே இந்த விதிமுறை இருக்கிறது என்பதைத் தயவுசெய்து எங்களைப் போன்ற சாதாரணமானவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். ஜெர்மானிய நாட்டிலே ஒரு விழா உண்டா? ஜெர்மானிய இசையைக் காப்பதற்கு; இங்கிலாந்து நாட்டிலே ஒரு விழா உண்டா? ஆங்கில மொழியின் இசையைக் காப்பதற்கு; விடுதலைக்குப் பெயர்பெற்ற சுதந்திர வீரர்களைப் படைத்த பிரான்ஸ் நாட்டிலே உண்டா? சொல்லுங்கள். இந்தியத் துணைக் கண்டத்திலேயே வேறு எந்த மாநிலங்களிலேயாவது உண்டா? வங்காளத்திலே உண்டா? இந்தியிலே உண்டா? ஏன் பக்கத்திலேயே இருக்கின்ற கருநாடகத்திலே உண்டா? ஆந்திரத்திலே உண்டா? தமிழகத்திலேதானே தமிழ் இசை வேண்டும் என்று ஓர் இயக்கத்தை முப்பத்தேழு ஆண்டுகளாக நடத்திக்கொண்டிருக்கிறோம்?

நான் முன்னாலே எடுத்துக் காட்டியதைப்போல் இந்த நாட்டிலே கோடிக்கணக்கான—சாதாரண பாமர மக்களுக்காகத் தான் இசை என்றால், அந்த இசைதான் வாழும். ஏதோ சில சதவிகிதம் படித்த வசதி வாய்ப்புக்களைப் பெற்றிருக்கின்ற ஆயிரக்கணக்கானவர்களுக்கு அல்லது இலட்சக்கணக்கானவர்களுக்கு மட்டுமே அல்லாமல் இந்த நாட்டிலே இருக்கின்ற கோடிக்கணக்கான—பெரும்பான்மை மக்கள் எதனை ஏற்றுக்கொள்ளுகிறார்

களோ அந்த இசைதான் காலா காலத்திற்கும் இருக்கும். இல்லை யென்றால் நாம் எத்தனை விழாக்கள் நடத்தினாலும் எத்தனை ஆராய்ச்சி உரைகளை நாம் நடத்தியிருந்தாலும் அது போய்ச் சேர வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேராது. தங்க மாளிகையின் உயர்ந்த கோபுரத்திலே உட்கார்ந்துகொண்டு நாம் விவாதித்துக் கொண்டு இருந்தால் கீழே இருக்கின்ற பாமர மக்கள், "யாரோ நாலுபேர் கொடுத்துவைத்தவர்கள், உயரே உட்கார்ந்துகொண் டிருக்கிறார்கள்" என்று அவனவன் தன் தன் வேலையைப் பார்த்துக்கொண்டிருப்பான். அவ்வாறு அவன் வேலையைப் பார்த்துக்கொண்டிருக்கின்ற நேரத்திலேதான் பரதநாட்டியம் காஷ்மீரத்திலே இருந்து வந்தது என்ற கருத்தும் இழைக்கப் படுகின்ற காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இந்த நிலையை—நீங்கள் தயவு செய்து மனத்திலே எண்ணிப் பார்க்க வேண்டும், என்பதுதான் என்னுடைய பணிவான வேண்டுகோள். முப்பத்தேழு ஆண்டுகள் இந்த இயக்கத்தை நடத்திக்கொண்டிருக் கின்றோம். டாக்டர் ம. பொ. சி. அவர்கள் கடந்த ஆண்டு சாத்திரமும் சரித்திரமும் இணையாமல் இருக்கின்றன என்று குறிப் பிட்டிருக்கின்றார்கள். சாத்திரம் கற்றவர்கள், சரித்திரம் கற்கவில்லை. சரித்திரம் கற்றவர்கள் சாத்திரத்தைத் தெரிந்துகொள்ள முயல வில்லை. இந்த இரண்டும் இணைந்தால்தான் இந்த நாட்டிற்கு விமோசனம் என்று எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அதைத் தான் எங்களைப் போன்ற சாதாரண மக்கள் எதிர்பார்க்கிறோம். இசையைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்துகின்றீர்கள்! பண் ஆராய்ச்சி நடைபெறுகின்றது. இவற்றையெல்லாம நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், முப்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்னாலே செட்டி நாட்டு அரசர் அவர்கள் எந்தக் கருத்தோடு இந்த இயக்கத்தைத் துவக்கினார்களோ அதிலே நாம் வெற்றி பெற்றோமா என்றால் இன்றைக்குக்கூட இதனைப்பற்றி வாதிடு கின்ற நிலையிலேதான் வளர்ந்திருக்கின்றோமே தவிர—சிலபேர் இதனை ஏற்றுக்கொள்ளுகின்ற அளவிற்கு வந்திருக்கிறார்களே தவிர வேறு வளர்ச்சியில்லை. தமிழ்நாட்டிலே தமிழ் இசை என்பது, உரிமை; இதைத் தவிர வேறு எந்தப் பிரச்சினைக்கும் இடமில்லை; எந்த இசையை யார் வேண்டுமானாலும் விரும்பலாம். அதிலே தவறில்லை. ஆனால், தமிழ் இசை வேண்டும் என்று சொல்வதற்கு ஓர் இயக்கமா? ஒரு விவாதமா? இதற்காக விழாக்களா? மாநாடு களா? இதனைத்தான் எங்களைப் போன்றவர்கள் கேட்கின்றோம். ஆனால் எங்களிடத்திலே இந்த இசையைக் கொண்டுவர வேண்டும் என்பதுதான் இந்த விழாவின் மூலம் நான் வைக்கின்ற வேண்டு கோள். இந்த இசை இன்றைக்கு எங்கே இருக்கிறது? அஃது

எவ்வளவு தூரத்தில் இருக்கிறது? என்று நான் சரியாக-துல்லியமாகச் சொல்ல விரும்பவில்லை. ஆனால், எங்களைப் போன்ற சாதாரணமானவர்களுக்கு எட்டாத தூரத்திலே இருக்கின்றது. அதனை எங்களிடத்திலே கொண்டுவாருங்கள். அல்லது எங்களையாவது அந்த இடத்திற்கு உயர்த்துங்கள். இந்த இரண்டையும் நீங்கள் செய்யவில்லையானால் தமிழ்இசை தமிழ்இசை என்று ஆண்டிற்கு ஒரு முறை கூடிப் பேசுவதுதான் பலன் அளிக்குமே தவிர வேறு நாம் நிச்சயமான பலனை எதிர்பார்க்க முடியாது. இன்றைக்கு இசையைப் பற்றிப் பேசுகின்றபோது எது சாஸ்திரிய சங்கீதம்? எது கர்நாடக இசை? எது இந்தக் காலத்திலே கலப்படமாகியுள்ள இசை என்ற ஆராய்ச்சிகளில் எல்லாம் இசை அறிஞர்கள் ஈடுபடுகின்றார்கள். எங்களுக்கு இதுபற்றி ஒன்றுமே தெரியாது. எங்களுக்கு இசை என்பதற்கு அடிப்படை இலக்கணம் என்னவோ அதுதான் தெரியும். இசை என்பது, இன்பத்தின் அடிப்படையிலே வந்தது என்று நீதிபதி அவர்கள் சொல்வார்களேயானால் அந்த இன்பத்தை எங்களுக்கு அளியுங்கள். இசை என்பது நம்மை இசைய வைப்பது; அதனால்தான் அதற்கு இசை என்று பெயர் என்று நீங்கள் எடுத்துச் சொல்வீர்களேயானால் எங்களை இசைய வையுங்கள். எங்களை உங்கள் இசை இன்பத்திற்கு இழுத்துச் செல்லுங்கள். ஏனென்றால் நாங்கள் எங்கோ இருக்கின்றோம், நீங்கள் எங்கோ இருக்கின்றீர்கள். தயவுசெய்து இந்தச் சிந்தனையை உங்கள் முன்னாலே நான் வைக்க விரும்புகின்றேன்.

40 ஆண்டுகளுக்கு முன்னாலே நாம் சங்கீதக் கச்சேரியிலே போய் உட்கார்ந்தால் அந்த மிகப்பெரிய வித்துவான் வாதாபி கணபதீம் என்று ஆரம்பித்து அதிலேயிருந்து பாடி "நீநாமரூப முனகு" என்று முடிப்பார். இன்றைக்கும் அப்படித்தான்.

நான் முன்னாலே சொன்னதைப் போல நான் ஒரு சாதாரண பாமரன். எங்களைப் போன்றவர்களை உங்கள் பக்கம் இழுப்பதற்கு என்ன செய்கின்றீர்கள்? சினிமாப்பக்கம் போகாதீர்கள் என்றால் வீட்டிலே இருப்பவர்கள் நல்ல இசை உணர்வுகளை ஊட்டினால்—மற்றவர்களை நான் திரும்பிப் பார்க்கமாட்டேன்,

40 ஆண்டுக் காலத்தில் வெளிவந்த 20 ஆயிரம் திரைப்பாடல்களில் ஒரு பாடலைப் போல மற்றொரு பாடல் இல்லை.

இசையிலே மாத்திரம் இது 2000 ஆண்டுகளுக்கு முன்னாலே தோன்றியது, இது 200 ஆண்டுகளுக்கு முன்னாலே மும்மூர்த்திகள் உருவாக்கிய இசை, இதிலேயிருந்து மாறமாட்டோம் என்று நீங்கள் சொல்வீர்களேயானால், நாம், பெரியவர்கள் சொல்லு

கிருர்கள்; நாம் அவர்கள் பக்கத்திலே போகக்கூடாது, அவர்களுக்கு அவமரியாதை செய்யக்கூடாது, ஆகவே நமக்கு எது சாதகமாகக் காதுக்கு இனிமையாக இருக்கின்றதோ அங்கே போவோம் என்று இந்த நாட்டு மக்கள் போய்க்கொண்டிருக்கிருர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். ஆகவே இதனைத் தடுத்து நிறுத்த முயல்வதில் பயன் இல்லை. எங்கே மாற்றங்கள் வந்துகொண்டிருக்கின்றன என்பதனை உணர்ந்து அதற்கு ஏற்ப இசை அறிஞர்கள் வேண்டிய மாற்றத்தை உருவாக்கித் தரவேண்டும்.

இசையானது இன்பத்தைத் தருகின்றது என்று சொல்வீர்களேயானுல் அந்த இன்பத்தைத் தருவதற்கு வேண்டுவன செய்யுங்கள் என்று கோடிக்கணக்கான பாமர மக்களின் பிரதிநிதியாக இருந்து இந்த வேண்டுகோளை உங்களுக்கு விடுத்து முப்பத்து ஏழாம் தமிழ் இசை விழாவினைத் தொடங்கி வைக்கின்றேன்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர், டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்களின் தொடக்கவுரைச் சுருக்கம்:

தமிழிசை அன்பர்களே,

தனக்குவமை இல்லாத் தமிழிசைச் சங்கத்தின் முப்பதாம் ஆண்டுப் பண்ணுராய்ச்சிக் கூட்டத்தினை இன்று தொடங்கி வைக்கும் தனிப்பேறு பெற்றுள்ளேன்.

நாற்பது ஆண்டுகளாகத் தமிழிசையியக்கம் மும்முரமாகப் பரவியும் பரப்பப்பட்டும் வந்தாலும் ஆணிவேரிசை தமிழ் மண்ணில் நல்ல வண்ணம் ஊன்றிவிட்டதென மனநிறைவு கொள்ளுவதற்கோ நம்பிக்கை கொள்வதற்கோ கிஞ்சிற்றும் இடமில்லை. ஏன்? தமிழகத்தில் இசைவிழாக் கொண்டாடி வரும் சங்கீத சபாக்களும் வானெலியும் தமிழ் இசை உருக்களுக்கு நெஞ்சார்ந்த முதலிடம் கொடுக்கும்போதுதான் தமிழிசையியக்கத்தார் நம்பிக்கை மூச்சுவிட முடியும். இன்னும் சங்கீத மேதைகள் மனம் திரும்பாத நிலையில் தமிழிசையியக்கம் எவ்வளவு காலம் செல்லவேண்டி வருமோ என்று சொல்வதற்கில்லை.

பண்ணுராய்ச்சியின் தொடக்க மாநாடுகள் பழம்பண்கட்குரிய புதிய இராகப் பெயர்கள் எவை என்று ஒத்துப் பார்த்து முடிவு கட்டுவதிலேயே கருத்தைச் செலுத்தியுள்ளன. முல்லைப்பண் மோகனமாம்; கோடிப் பாலை சங்கராபரணமாம்; அரும்பாலை கரகரப்பிரியாவாம்; செம்பாலை அரிகாம்போதியாம்; செவ்வழிப்பாலை யதுகுல காம்போதியாம்; படுமலைப்பாலை கல்யாணியாம்; மேற்செம்

பாலை நடபைரவியாம்; பஞ்சமம் ஆகிரியாம்; செந்துருத்தி மத்திய மாவதியாம்; சாதாரி பந்துவராளியாம்; மேகராகக்குறிஞ்சி நீலாம் பரியாம்; புறநீர்மை பூபாளமாம் என்ற பண் இராக ஒப்புமைகளால் பெயர்கள் மாறினலும் தமிழிசையின் மறுபிறப்பே தென்னாட்டுக் கருநாடக சங்கீதம் என்பது எண்பிக்கப்பட்டது. இதனல் பண் குழு தமிழ் மானத்தைக் காத்துத் தந்தது என்று நன்றியுணர் வோடு பாராட்டுகிறேன்.

பின் நடந்த பண் மாநாடுகளில் சிலப்பதிகாரம், சிலப்பதிகார உரைகள், விபுலானந்த அடிகளாரின் யாழ்நூல் சிறப்பான ஆய்வுக்கு மேற்கொள்ளப்பட்டிருப்பது நல்ல இசைத் தடத்தில் கால் வைத்திருக்கின்ரேம் என்பதனைக் காட்டுகின்றது. ஏழ்பெரும் பாலைகள், ஐந்து சிறுபாலைகள், நால்வகை யாழ், இளிக்கிரமம், தாரமே முதல் நரம்பு, குரல் திரிபு, வலமுறை, இடமுறை, குரல் இளிவுறவு, வம்புறு மரபிற் பாலை, வட்டப்பாலை, அரும்பாலை, அக நிலை, புறநிலை, அருகியல், பெருகியல், வண்ணப்பட்டடை, தாரத் தாக்கம் யாழுக்கும் பண்ணுக்கும் உள்ள தொடர்பு முதலான நுணுக்கங்களை வீணை கோமதிசங்கர அய்யர், டாக்டர் இராமநாதன், குடந்தை சுந்தரேசனர், பேராசிரியர் வெள்ளை வாரணர் முதலான பெருமக்கள் விளக்கியுள்ளனர். எனவே பண்ணாராய்ச்சி உண்மை யான உயர்ந்த தரத்திலும் தடத்திலும் ஓங்கிச் சென்றிருப்பதைக் காண்கின்ரேம்.

மேற்சொல்லியாங்கு முப்பது ஆண்டுகளாக ஆய்வு நடந்து சில தெளிவான முடிவுகளைக் கண்டபின் இனி நாம் செய்ய வேண் டுவது என்ன என்பதனைச் சுட்டிக் காட்டுவதே என் தொடக்க வுரையின் நோக்கம்.

இசையன்பர்களே, இதுகாறும் இருந்துவரும் **தமிழிசையிபக் கம்** இனி இசைத் **தமிழியக்கமாகவும்** மாறவேண்டாமா? உருப்படிகள் மட்டும், தமிழாக மாறினற் போதுமா? அத் தமிழுக்குள் இசைத் தமிழின் படியும் அமைய வேண்டாமா? கி. பி. 13ஆம் நூற்ருண் டில் சாரங்கத் தேவரின் சங்கீதரத்னகரமும், 17ஆம் நூற்ருண்டில் வேங்கடமகியின் சதுரத் தண்டிப்பிரகாசியையும் அகோபிலரின் சங்கீத பாரிசாதமும் இன்னபிற சங்கீத இலட்சண நூல்களும் வடமொழியில் தமிழகந்தாண்டி எழுதப்பட்டவை. இச் சங்கீத இலக்கணங்கட்குத் தமிழிற் சாகித்தியம் செய்வதுவா நம்முடைய நோக்கம்? பாடல்கள் தமிழ்மொழியாகவும் இருக்க வேண்டும்; அவை இசைத் தமிழாகவும் இருக்கவேண்டும் என்ற தனித் தன்மையை நாம் கடைப்பிடிப்போமாக. கருநாடக சங்கீதம் தமிழ்

வழியாக இருக்கலாம். ஆனால், தமிழிசையைக் கருநாடக சங்கீதத்தின் அடிமையாக ஆக்கிவிடக் கூடாது. தந்தை சாயலை மகனிடத்துப் பார்ப்பதில் தவறில்லை. ஆனால் மகன் சாயலைத் தந்தைத் தன்மைக்கு மூலமாக்கி விடலாகாது.

இசைத் தமிழ் பற்றி இன்னும் ஒரு கருத்து ச ரி க ம ப த நி என்ற சுரங்கள் இசைத் தமிழுக்கு உரியவையா? அரும்பதவுரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் இவற்றை இசைத் தமிழுக்கு உரிய எழுத்துக்களாகக் காட்டியிருப்பது இடைக்காலப்பிறவரலாகும். இவற்றைச் சுரமாகவே பாடுமுறை எப்போது தோன்றிற்று என அறுதியிடுவதற்கில்லை என டாக்டர் இராமநாதன் தம் சிலப்பதிகார இசை நுணுக்க விளக்கத்தில் சுட்டியுள்ளார். குடுமியான் மலைக் கல்வெட்டில் உள்ள இராகங்களுக்கும் தேவார இராகங்கட்கும் சம்பந்தமே இல்லை என்பது இசைப் பேரறிஞர் சாம்பமூர்த்தியாரின் கருத்து.

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ எனும்
இவ்வே ழெழுத்தும் ஏழிசைக் குரலே

என்பது சேந்தன் திவாகரம் பொதிந்து வைத்திருக்கும் இசைக் குறிப்பு.

அள பிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய

என்று தொல்காப்பியம் நூன்மரபிற் கூறுவதிலிருந்து தமிழ் எழுத்துக்களையே ஏழிசை யெழுத்துக்களாகவும் கொண்டிருக்கவேண்டும் என்று ஊகிப்பதில் தவறில்லை. இந்த அடிப்படையிலும் இசைத் தமிழை ஆராய்ந்து தமிழுருப்படிகளைப் பாடவேண்டும்.

இசைத் தமிழில் வேண்டாத ஒரு தன்மை இடைக்கால முதல் புகுந்திருப்பதாகக் காண்கின்றேன். ஏழிசைகளையும் 12 இராசி வட்டம் என்னும் வீடுகளில் நிறுத்தும் முறை எப்போது வந்தது? சிலப்பதிகாரத்தின் இருவகை யுரையாசிரியர்களும் பண்ணுக்கும் இராசிக்கும் உள்ள தொடர்புகளைப் பல்வேறு வெண்பா மேற்கோள் காட்டி விளக்கியுள்ளனர். சிலப்பதிகாரத்தில் இராசித் தொடர்புக்கு அகச் சான்று உண்டா?

தொன்றுபடு முறையான் நிறுத்தி
இடைமுது மகள் இவர்க்குப்
படைத்துக் கோட் பெயரிடுவாள்
குடமுதல் இடமுறையாக் குரல்துத்தம்

கைக்கிளை யுழையிளி விளரி தாரமென
விரிதரு பூங்குழல் வேண்டிய பெயரே.

இந்தச் சிலப்பதிகாரப் பகுதிக்கும் இராசிவட்ட விரிவுக்கும் பண்ணாராய்ச்சி மாநாடு இதுகாறும் தொடர்புபடுத்தி ஆராய்ந்திருப்பது இசைத் தமிழியல் ஆகாது என்பது என் கருத்து. சங்கீதகலாநிதி முடிகொண்டான் வேங்கடராமையா அவர்கள் சுரங்கள் தாளங்கள் அவைகட்கும் கிரகங்கள் இராசிகள் இவைகட்கும் எண்ணிக்கையில் ஒரு வேற்றுமை இருப்பதனுல் படிப்பவர்களுக்குச் சுலபமாக அறிந்துகொள்ளும் பொருட்டே இம்மாதிரி சோதிடத்தில் உள்ள விஷயங்களை வைத்துக்கொண்டு இசையை விளக்கியிருக்கிருர்கள் உரையாசிரியர்கள் எனவும் வேறு காரணம் ஒன்றும் இருக்க ஞாயமில்லை எனவும் அழுத்தமாகச் சொல்லியிருப்பதை நினைவூட்டுகின்றேன்.

தமிழினம் கண்டுவளர்த்துப் பரப்பிய கலைகள் எண்ணிறந்தன. அவை பற்றி எழுதிய இலக்கண நூல்களும் எண்ணவும் சொல்லவும் தொலையாதவை. அவையெல்லாம் ஏன் தொலைந்தன, எப்படித் தொலைந்தன? ஆடிப் பெருக்கில் ஓடவிட்டோம் என்பது நேற்று வந்த காரணம். இழப்புக்கு உண்மையான காரணத்தைக் கண்டு அதனை விலக்கினுலல்லாது, உள்ள கலைகளும் பின்னெரு நாள் இழப்பாகி விடும் என்று எச்சரிக்க விரும்புகின்றேன்.

எப்போது தமிழ்க் கலைகட்குரிய தமிழ்ச் சொற்குறியீடுகளைக் கைவிட்டோமோ, எப்போது—அக் குறியீடுகளெல்லாம் வடமொழிக் குறியீடுகளாக ஆயினவோ, அங்ஙனம் ஆகிய வடமொழிக் குறிச் சொற்களையே எப்போது கற்கத் தொடங்கினமோ அப்போது தொடங்கிக் கலைக்கிழமை இழந்தோம்; படிப்பாரற்றுக் கலை இலக்கணத் தமிழ் நூல்களையும் இழந்தோம் இழந்த இசையிலக்கண நூல்களைக் குறிப்பிடும் அடியார்க்கு நல்லார் தம் காலத்து இருந்த சிகண்டி, இசை நுணுக்கம், இந்திரகாளியம் முதலான இசை நூல்களைக் கூறுகின்ருர். பின்னர் அவற்றையும் இழந்தோம். இன்று கிடைக்கும் இசைத்தமிழ்க் குறிப்புக்கள் எல்லாம் இயற் புலவர்களும் உரையாசிரியர்களும் எழுதிக் காத்த குறிப்புக்கள். இடைக்கால இசைத் தமிழ்ப் புலவர்கள் முழுதும் வடமொழி நூல்களைக் கற்றமையாலும் கற்பித்தமையாலும் இசைத் தமிழ் நூல்கள் படியெடுப்பாரற்றுச் சாகுபடியாயின என்பதனை இன்றைய இசைப் பேரறிஞர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

யாழ் நூல் தந்தை விபுலானந்த அடிகள் கூத்தும் வரியும் சிற்றிசையும் பேரிசையும் முதலான நூல்களைக் காலமும் கயவரும்

அழிக்க முயன்றாராயினும் முக்காலமும் உணர்ந்த சேர முனிவர் இவற்றினுட் பொதிந்த பொருள்களைக் காத்துக் கொடுத்துள்ளார் எனவும் தொலைந்த இசை நூல்களின் கருத்தனைத்தும் கண்ணுடி மலைபோலச் சிலப்பதிகார முத்தமிழ்க் காப்பியத்தில் கிடக்கின்றன எனவும் பெரிய நம்பிக்கைக்குரிய பற்றுக்கோட்டினை அருளி யுள்ளனர்.

தொல்காப்பியம், சங்கவிலக்கியம் முதலான தொன்மை நூல்கள் இன்றுவரையுள்ளனவே. காரணம் இயற்றமிழ்க் குறியீடு களைக் கூடியவரை வடமொழியாக மாருமல் இயற்புலவர்கள் காத்துக்கொண்டனர். தமிழிசையும் இசைத் தமிழும் நிலைபேறும் நல்வளர்ச்சியும் அடைய வேண்டும் என்பது நம் எல்லோர் தம் மாசற்ற விருப்பம். அதற்கு இனிச் செய்யவேண்டியது ஒன்றே ஒன்று. தொல்காப்பியம், சங்கவிலக்கியம்; சிலப்பதிகாரம் இவற்றில் வரும் இசைத் தமிழ்க் குறியீடுகளைக் கொண்டு இளங்கோ இசை நுணுக்கம் என்ற இசைத் தமிழ் நூலைப் படைக்க வழி செய்ய வேண்டுகின்றேன். குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் எனவும் பண் பண்ணியல் திறம் திறத்திறம் எனவும் வட்டப் பாலை படுமலைப்பாலை செவ்வழிப்பாலை எனவும் வரும் இன்னோ ரன்ன தமிழ்க் குறியீடுகள் மீண்டும் இசைத் தமிழில் வாழ்வு பெற வேண்டும். யாழடிப்படையில் இசைத் தமிழ் நுணுக்கங்கள் எழுதப் பட வேண்டும். தமக்கென ஓர் இசைத் தமிழ் நூல் இல்லாவிடின் தமிழிசையியக்கத்துக்கு ஆணிவேரும் வேர்விட்டுக் கிளைத்தற்குரிய உர மண்ணும் இல்லாது போய்விடுமோ என்று அஞ்சுகின்றேன்.

அண்ணமலையரசரின் நூற்றண்டு விழா :

தமிழிசை இயக்கத்தை நிறுவிய வள்ளல் அண்ணமலையரசரின் நூற்றண்டு விழாவினை 1981இல் நாடு கொண்டாடவிருக்கின்றது. இவ் வரசரின் விழாவினை ஓராண்டு முழுதும் தமிழிசை விழாவாகக் கொண்டாடுவோம். அங்ஙனம் கொண்டாடும் முத்திரையாக இளங்கோ இசை நுணுக்கம் என்ற இசைத் தமிழிலக்கண நூல் அரங்கேற்றப்படும் என்று பெரிதும் எதிர்பார்க்கின்றேன். பண் ணய்வு மாநாட்டில் கலந்துகொள்ளும் இசைப் பேரறிஞர்கள் இந் நூலுக்குரிய திட்டம் செய்யவேண்டும் எனவும் தமிழிசைச் சங்கத் தலைவராம் டாக்டர் மகராசன் அவர்களும் அரசர் டாக்டர் முத்தையவேள் அவர்களும் இந் நூற்படைப்புக்கு வேண்டும் உதவியெல்லாம் செய்யவேண்டும் எனவும் பணிவோடும் நம்பிக்கை யோடும் வேண்டிக்கொள்கின்றேன்.

———

தமிழ் இசை ஆராய்ச்சிக் குழுச் செயலாளர் பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்களின் நன்றியுரை :

தமிழ் இசைச் சங்கத்தின் சார்பாக நன்றி கூறும் கடமையினை மிகச் சுருக்கமாக நிறைவேற்ற நான் இங்கே வந்துள்ளேன். மாண்புமிகு அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் எங்கே பேசினுலும் எந்தப் பொருள் பற்றிப் பேசினுலும் தெளிவாக, திறமையாக, செம்மையாகப் பேசுவதை நாம் கண்டு வருகின்ருேம். இதற்குக் காரணம், அவர்களுடைய உள்ளத்திலே உள்ள தெளிவுதான். இன்றும் நம்முடைய தமிழ்இசைக்கு அரசர் அண்ணுமலை வள்ளல் அவர்கள், அரசர் முத்தையவள்ளல் அவர்கள், ஆர். கே. சண் முகம் செட்டியார் அவர்கள் முதலிய பெருமக்களெல்லாம் ஆற்றிய பணிகளை அழுத்தம் திருத்தமாக நினைவு கூர்ந்தார்கள். அவர் களுக்கு நாம் எல்லோரும் பாராட்டுக் கூறுவது ஒரு புறம் இருக்க, அவர்களுக்காக வேறு ஒருவரைப் பாராட்டவேண்டும் என்பது என் கருத்து. குடத்தின் விளக்காக இசைக் கலைக்கு மட்டும்—திரைப் படக் கலைக்கு மட்டும் நாடகக் கலைக்கு மட்டும் தொண்டாற்றிக் கொண்டிருந்த அவர்களைப் பொதுநலப் பணியாற்ற நாட்டிற்குச் சேவை செய்யக் கொண்டுவந்த மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்களை நாம் பாராட்ட வேண்டும். எனவே மாண்புமிகு முதல்வர் பெருமகனுருக்கும், மாண்புமிகு அமைச்சர் திரு. வீரப்பன் அவர்களுக்கும் தமிழ் இசைச் சங்கத்தின் சார்பாக நன்றி கூறுகின்றேன்.

தமிழ் இசைச் சங்கத் தலைவர் திரு. மகராசன் அவர்கள் நாட்டியத்தைப் பற்றிப் பேசிய ஆராய்ச்சி உரையைக் கேட்டுத் தமிழ் இசைச் சங்க கௌரவச் செயலாளர் திரு. எம். ஏ. சிதம் பரம் அவர்கள், இந்தப் பேச்சுக்கே டாக்டர் பட்டம் கொடுக்கலாம் போல இருக்கிறது என்று சொன்ஞர்கள். அப்போது நான், அரசர் முத்தைய வள்ளல் அவர்களுடைய அன்பினுலே—ஆதரவி னுலே தமிழகம் வரவேற்கும் வகையில் திரு. மகராசன் அவர் களுக்கு அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பொன்விழாவில் டாக்டர் பட்டம் கொடுத்துவிட்டோம் என்று கூறினேன். தமிழ் இசைச் சங்கத்தின் தலைவர் என்ற முறையில் நம் டாக்டர் திரு. மகராசன் அவர்கள்தாம் எனக்கு நன்றி கூறவேண்டும் என்ருலும், அவர் களின் அருமையான ஆராய்ச்சிப் பேச்சிற்காக அவர்களுக்கு நான் நன்றி கூறுகின்றேன். நம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோலப் பெரிய பெரிய அறிஞர்கள் எல்லாம்—மிகச் சிறந்த தமிழன்பர்கள் எல்லாம் இங்கே நம் தமிழ் இசைச் சங்க விழா விற்கு வந்திருக்கின்ருர்கள். நம்முடைய மதிப்பிற்கு உரிய சிலம்புச்

செல்வர் மாண்புமிகு டாக்டர் ம. பொ. சி. போன்ற பேரறிஞர்கள் பலர் வருகை தந்திருக்கின்றார்கள். தமிழன்பர்கள் திரளாக வந்திருக்கின்றனர். எல்லோருக்கும் தமிழ் இசைச் சங்கத்தின் சார்பாக நன்றி கூறுகின்றேன்.

சென்னை, தமிழ் இசைச் சங்கத் துணைத்தலைவர், செட்டி நாட்டு அரசர் தமிழிசைக் காவலர், பத்மபூஷண் டாக்டர் ராஜா சர். முத்தைய செட்டியார் அவர்களின் நன்றியுரை :

நம் பெருமதிப்பிற்கு உரிய—மரியாதைக்கு உரிய தமிழிசைச் சங்கத் தலைவர், டாக்டர் ஜஸ்டிஸ் மகராஜன் அவர்களே! பெரியோர்களே! உங்கள் எல்லோருக்கும் என் வணக்கம்.

வானொலியில் தமிழ் இசை

இப்போது வானொலியில் நல்ல தமிழ் இசையைக் கேட்கின்றோம். ஆனால் இதற்காக நாம் போராடிப் பெற்ற வரலாற்றை நினைத்துப் பார்க்கவேண்டும். 1927 முதல் 1935 வரை எட்டு ஆண்டுகள், அகில இந்திய வானொலி நிலயம் இங்கு வருவதற்கு முன், நான்தான் மாநகராட்சியின் மூலம் இரண்டரை லட்சம் ரூபாய் செலவழித்து வானொலி நிலயத்தை நடத்தினேன். அந்தக் காலத்தில் ஐந்தே கால் மணி முதல் ஆறு மணிவரை முக்கால் மணி நேரம் பாடுவதற்கு ஐம்பது ரூபாய் சன்மானம். 1935ஆம் ஆண்டு பீல்டன் என்பவர் இங்கு வந்தார். ரேடியோ நிலயத்தை நிறுத்திவிட வேண்டும் என்றார். நான் முடியாது என்று மறுத்து விட்டேன். அபராதம் போடுவேன் என்றார். போட்டாலும் பரவாயில்லை என்று கூறித் தொடர்ந்து நடத்தினேன். இவ்வாறெல்லாம் போராடி உரிமை பெற்றிருக்கிறோம்.

தமிழ் இசையின் பெருவளர்ச்சி

மூம்மூர்த்திகளுக்கு முன்னால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே தமிழில் இசைப்பாடல்கள் தோன்றிவிட்டன. பேரறிஞர் அண்ணா அவர்கள் எப்பொழுது தமிழைப் பற்றிப் பேச ஆரம்பித்தாலும், ''ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால்'' என்றுதான் பேசத் தொடங்குவார்கள். அவ்வளவு பெருமை, தமிழ் மொழிக்கு உண்டு. ஆனால் முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்நாட்டில் தமிழ்ப்பாட்டு வேண்டும் என்று கேட்கின்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

தமிழ் இசைச் சங்கத் தொடக்கவிழாவில் பேருரை ஆற்றிய மாண்புமிகு அமைச்சர் வீரப்பன் அவர்கள், எந்த விஷயத்திலும்

இயக்கம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். தமிழ் இசை இயக்கத்தை என் தந்தையார் அவர்கள் கல்கி, ராஜாஜி, டி. கே. சி. முதலியோர்கள் தொடங்கி வளர்த்தார்கள். அதற்குப் பின் தொடர்ந்து பலரும் இதனை வளர்த்து வருகின்றார்கள். இப்போது நாட்டின் நிலையைப் பார்த்தால் இந்த இயக்கம் நாடு முழுவதும் வலிமையாக இருக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இக் கருத்தினை மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்களும் பண் ஆராய்ச்சித் தொடக்கவுரையிலும் வற்புறுத்தினார்கள். இக் கருத்து மிகவும் முக்கியமான கருத்தாகும். இந்த இயக்கம் நாடு முழுவதும் கட்சியாக மாற வேண்டும். எனக்கு அமைச்சர் அவர்களைப் போலவும் துணைவேந்தர் மாணிக்கம் அவர்களைப் போலவும் அழகாகத் தமிழில் பேசத் தெரியாவிட்டாலும் நன்றாகக் கட்சி செய்வேன். 1942இல் தமிழ் இசை மாநாடு எங்கும் நடைபெற்றது. நானும், என் நண்பர் மாணிக்கவாசகம் பிள்ளையும் மிகப்பல மாநாடுகளில் கலந்து கொண்டோம். பாதி மாநாடுகளுக்கு மேல் நான் தொடங்கி வைத்தேன். கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் வேண்டிய உதவிகள் செய்தார்கள். அவர்களும் பல இடங்களுக்குக் கூட வருவார்கள். தேவகோட்டையில் இரண்டு நாள் மாநாடு நடைபெற்றது. இவ்வாறு வளர்ச்சி பெற்ற தமிழிசை இயக்கத்தை நாம் இன்னும் சிறப்பாக எங்கு பார்த்தாலும் பரப்ப வேண்டும். ஒவ்வொரு ஊரிலும் இயக்கம் நடத்தவேண்டும். இங்கே வந்திருக்கும் ஓதுவாமூர்த்திகள், இசைக் கலைஞர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் ஊரில் இந்த இயக்கம் நடத்தலாமே! அமைச்சர் அவர்கள், பட்டிதொட்டிகள் எங்கும் இயக்கம் பரவவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அவ்வாறு பரவினால்தான் தமிழிசை நிலைக்கும்; பாமர மக்களுக்குத் தமிழிசையைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. படிக்காதவர்கள் இன்னும் நம் நாட்டில் பலர் இருக்கிறார்கள். ஆதலால் அவர்கள் உணர்ந்து கொள்ளுமாறு தமிழிசையைப் பரப்ப வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆண்டுதோறும் பண் ஆராய்ச்சி

பண் ஆராய்ச்சியை சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். பேராசிரியர் எல். பி. கே. ஆர். இராமநாதன் செட்டியார் அவர்கள், இவ் ஆராய்ச்சிக்காகப் பெரிதும் பாடுபட்டு வருகின்றார்கள். டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் அவர்கள் பல ஆண்டுகள், பேராசிரியர் இராமநாதன் செட்டியார் அவர்களுக்கு உதவியாக இருந்து தொண்டு செய்தார்கள். இப்போது இளவரசு துணையாக இருந்து உதவி செய்து வருகின்றார்.

பண் ஆராய்ச்சிக் கூட்டம் ஐந்து நாட்களில் முடிந்து விடுகின்றது என்று இங்கே குறிப்பிட்டார்கள், இவ்வாறு கூறக்கூடாது.

இசைக் கலைஞர்களுக்கு வேண்டுகோள்

இந்த அரங்கத்தில் ஏட்டுச் சுவடியைப் பற்றிய பேச்சு வந்தது; அதனால் ஒரு கருத்தினைச் சொல்ல விரும்புகின்றேன். இங்கே உள்ள ஓதுவார்களை நான் ஒன்று கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். உங்களிடம் உள்ள முன்னோர்கள் தேடிவைத்த ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு வந்து தாருங்கள்; தெம்மாங்குப் பாடல்கள் ஏராளமாக அச்சிடப்படாமல் இருக்கின்றன. அவற்றையெல்லாம் அவசியம் கொண்டு வந்து தாருங்கள். நீங்கள் உங்களிடம் உள்ள ஏட்டுச் சுவடிகளையெல்லாம் கொண்டு வந்து கொடுத்தால் நியாயமான விலையை நாங்கள் தருகின்றோம்.

அவற்றை அச்சுப்போட வேண்டுமென்றால் தமிழிசைச் சங்கம் ஏற்பாடு செய்யும். இல்லையேல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அச்சிடுவோம். தமிழிசை இயக்கம் என்பது, தமிழ் மக்கள் உள்ளவரை நடைபெற வேண்டிய இயக்கம். அந்த இயக்கத்தில் ஊறிப் போயிருக்கின்ற நீங்கள் தமிழ்நாடெங்கும் சென்று இயக்கத்தைப் பலப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ் இசைச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் இப் பண் ஆராய்ச்சிக் கூட்டம் ஐந்து நாட்களாக மிகச் சிறப்பாக நடைபெற்றது. பலவேறு நிகழ்ச்சிகள் இங்கே நடத்தப்பெற்றன. சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படித்தார்கள். அறிஞர்கள் பலர் பங்கு கொண்டு கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டார்கள். இந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட அறிஞர்களுக்கும் வந்திருந்த பெருமக்களுக்கும் இந்த அரங்கிற்குத் தலைமை தாங்கி மிகச்சிறப்பாக நடத்திக்கொடுத்த நம் திரு. மீ. ப. சோமசுந்தரம் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தமிழ் இசைச்சங்கத்தின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். வணக்கம்.

———

இசையின் அரிய திறன்

உயர்ந்த எண்ணங்களை உள்ளத்தில் எழச்செய்ய-கடுஞ்சினம் கனிந்து எழும்படி தூண்ட-அன்பைப் பெருக்க-மனிதரை இயக்கி ஆட்கொள்ளும்படி செய்ய, இசையைக் காட்டிலும் அரிய திறம் வாய்ந்த மறைகலை வேறு எதுவுமில்லை.

—அடிசன்

வானுலகத் தொடர்பு

[என். கே. வேலன், பி. ஏ.]

வான உலகங்களில் நம்மைப் போன்ற உயிர்கள் இருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். அல்லது வேறு வகையான உயிர்களும் இருக்கலாம். அறிவியல் அறிஞர்கள் இவ் வுயிர்களுடன் தொடர்பு கொள்ள முயற்சி செய்து வருகின்றனர். நம்மைப் போலவே வானுலக உயிர்களும் நம்முடன் தொடர்பு கொள்ள முயற்சி செய்து கொண்டிருப்பார்கள் எனக் கூறுகின்றனர்.

வானவர்களைத் தேவர்கள் எனப் புராணங்கள் கூறுகின்றன. தேவர்கள் இமையாத கண்களையுடையவர்கள். முகத்தில் ஒளி வீசிக்கொண்டிருக்கும். பாதம் தரையில் படாது எனக் கூறுவர். இமையாத கண்களையுடையவர் என்பதனைக் கம்பர் பின் வருமாறு பாடுகின்றார் :

''இமையா நாட்டம் பெற்றில மென்றார் இருகண்ணால்
அமையா தென்றார் அந்தர வானத் தவரெல்லாம்''

தெய்வத்தின் அழகைக் காண்பதற்கு இமையாத கண்களைப் பெறவில்லையே என்று மனிதர்கள் ஏங்குகின்றனர். அழகுத் தெய்வத்தைப் பார்த்துக் கொண்டே இருப்பதற்கு இரண்டு கண்கள் போதா என வானவர்கள் கூறுகின்றனர்.

தேவர்களுடைய பாதங்கள் தரையில் படுவதில்லை என்பது அறிவியல் முறைக்கும் பொருத்தமாக இருக்கின்றது. புவியீர்ப்புக்கு அப்பால் சென்றால் எடையற்ற நிலை ஏற்படும். வானவெளியில் மிதப்பது போலிருக்கும். வானவெளிக்குச் செல்லும் வீரர்கள் குழந்தைகளைப்போல் நடை பயில்வார்கள். அவர்களுடைய பாதங்கள் நிலைத்து நிற்பதில்லை. வானவெளி எல்லையற்றதாக இருக்கின்றது. கோடிக் கணக்கான விண்மீன்கள் மணற் பரப்பைப் போல் பரந்து விரிந்து கிடக்கின்றன. அண்டப் பகுதிகளும் பேரண்டங்களும் கண்ணுக்கும், தொலை நோக்காடிக்கும் எட்டாத அளவு தூரத்தில் விரிந்துகொண்டே போகின்றன.

குறிப்பு : 21-12-1979 இல் திரு. என். கே. வேலன் அவர்களால் செந்தமிழ்ச் செல்விக்கு எழுதப்பெற்ற இக் கட்டுரை 22-12-7 ல் கிடைக்கப் பெற்றமை வியத்தற்குரியது.

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன" —திருவாசகம்

கோடிக் கணக்கான கதிரவன்களும் அவற்றைச் சுற்றிவரும் கோள்களும் அளப்பருந்தன்மையுடன் காணப்படுகின்றன. அணுவின் ஆற்றலால் இயங்கும் தொலை நோக்காடிகள் அவற்றைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. புதிதாகப் படைக்கப்படும் உலகங்களையும் அழிக்கப்பட்ட உலகங்களையும் ஆராய்ச்சியாளர்கள் படம் பிடித்துள்ளனர். இரவு முழுவதும் கண் விழித்துக் காத்திருந்து கண்ணாடியை ஆயிரம் கோணங்களில் திருப்பி வைத்துப் படம் பிடிக்கின்றனர். 'கம்ப்யூட்டர்' என்னும் வியத்தகு கருவி கணக்கிட்டுப் பார்த்து வானவெளியின் செய்திகளை நமக்கு அறிவிக்கின்றது.

வானவெளியில் பல இடங்களில் உயிர்கள் தோன்றுவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. மிகத் தொலைவிலுள்ள கோள்களில் உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற பகுதிகளும் வேதியியற் பொருள்களும் உள்ளன. அமெரிக்காவிலும், கானடாவிலும், சோவியத்து நாட்டிலும் கம்பியில்லாத் தந்தி மூலம் இவ் வாராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன வானொலிப் பெட்டியில் பலவகையான ஓசைகள் வருவதைக் கேட்கிறோம். இவ் வோசைகளின் உட்பொருளை நம் அறிஞர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

"மனிதர்களே நீங்கள் தனித்திருக்கவில்லை. பரமானந்த வெள்ளம் இங்கே நிரம்பித் ததும்பிக் கிடக்கின்றது. அதனை அள்ளிப் பருகலாம் சேரவாரும் செகத்தீரே"

என்று வானவர்கள் நம்மை அழைப்பதுபோல் தோன்றுகிறது. இவ்வொலிகள் கணித மேதைகளுக்கும் தெரியாத குறியீடுகளாக இருக்கின்றன. வான உலகிலுள்ளவர்கள் சில குறியீடுகளை (சமிக்கைகளை) அனுப்புவதாகத் தெரிகின்றது. இவற்றைக் கண்டு பிடிப்பதற்கு உலக நாடுகளெல்லாம் முயற்சி செய்கின்றன.

வான வெளியிலிருந்து வருகின்ற ஒலிகளையெல்லாம் அறிஞர்கள் நன்றாக உற்றுநோக்கிப் பதிவு செய்து வருகின்றனர். அணு ஆற்றலின் உதவியால் மிகத் தொலைவிலிருந்து வரும் ஒலிகளையும் கேட்டறிய முடிகின்றது. நமது வேலை வைக்கோல் போரில் மறைந்து கிடக்கும் ஊசியைத் தேடுவது போலிருக்கின்றதென 'டிரேக்' என்னும் அறிஞர் கூறுகின்றார். முப்பது ஆண்டுகளாக நமது உலகத்தைப் பற்றிய செய்திகளை வான உலகங்களுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறோம். இச் செய்திகள் ஒளியின்

வேகத்தில் அனுப்பப்படுகின்றன. வானவெளியில் சுற்றிக்கொண்டிருக்கும் செயற்கைக் கோள்களுக்கும் செய்திகள் அனுப்புகிறோம்.

இச் செய்திகள் வானவெளியில் எல்லா இடங்களிலும் பரவுகின்றன. நாம் அனுப்பும் செய்திகள் வேறு உலகங்களுக்கும் போய்ச் சேர்ந்திருக்கலாம். 1974ஆம் ஆண்டில் 'டிரேக்' என்ற அறிஞரின் தலைமையில் நமது உலகத்தைப் பற்றிய 1679 செய்திகள் ஒலி பரப்பப்பட்டன. கணித முறைகள், தனிமங்கள், கரிப் பொருள்கள், உயிர்வளி, மனித உருவம், செய்தி அனுப்பும் கருவியின் படம் ஆகியவற்றை அனுப்பி வைத்தனர். இச் செய்திகளை எடுத்துச் சென்ற கருவி வானவெளியில் அனற்பிழம்பாகத் தோன்றியது.

அடுத்தபடியாக "பயனியர் 10—11" என்ற விண்கலங்கள் ஏவப்பட்டன. இக் கலங்கள் ஞாயிற்று மண்டிலத்திற்கு அப்பால் செல்வதற்கேற்றபடி அமைக்கப்பட்டிருந்தன. வியாழ மண்டிலத்தையும் கடந்து செல்லக்கூடியனவாக இருந்தன. விண்கலங்களில் ஆண் உருவம் பெண் உருவம், ஞாயிற்று மண்டிலத்தைச் சுற்றி வரும் கோள்களின் அமைப்பு, வாழ்த்துச் செய்திகள் ஆகியவை வைக்கப்பட்டுள்ளன.

"வாயேஜர் 1—2" என்ற விண்கலங்களும் வானவெளியில் பயணம் செய்துகொண்டிருக்கின்றன. இக் கலங்கள் சனி மண்டிலத்தையும் கடந்து செல்லும் ஆற்றலுடன் செய்யப்பட்டுள்ளன. அறுபதுக்கு மேற்பட்ட மொழிகளில் வாழ்த்துச் செய்திகளும், 116 காட்சிப் படங்களும் 1½ மணி நேரம் பாடக்கூடிய இசைத் தட்டுகளும் இக் கலங்களில் வைத்துள்ளனர். இவற்றை வானவெளியில் எவரேனும் கண்டுபிடித்தால் நம்முடன் தொடர்பு கொள்ள முயற்சி செய்வார்கள்.

வான உலகங்களில் இருப்பவர்கள் உருவத்தில் மாறுபட்டிருக்கலாம். நம்மைவிடத் திறமைசாலிகளாகவும் அறிவாற்றலுடையவர்களாகவும் இருக்கலாம். வானவர்கள் நமக்கு நன்மையே புரிவார்கள் என நம்பி இருக்கிறோம். வையகமும் வானகமும் வாழ்க என வாழ்த்துவோம்.

> "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
> பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
> கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
> வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்

செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்''

என மணிவாசகர் பாடுகின்றார்.

பல்வேறு உலகங்களில் படிப்படியாக வளர்ந்து வரும் பல வகையான உயிர்கள் இருக்கலாம். இவ் வுலகங்கள் மிகத்தொலைவிலிருப்பதால் அவற்றுடன் தொடர்புகொள்ளும் முயற்சி இன்னும் வெற்றிபெறவில்லை. உலகில் அறநெறியில் நின்று வாழ்வாங்கு வாழும் மனிதன் தேவனாகின்றான். வானுலகத்திலுள்ள தெய்வமாக வைத்து மதிக்கப்படுகின்றான் எனத் திருவள்ளுவர் கூறுகின்றார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்". (குறள்)

திருமந்திரத்தில் இரு சொற்கள்

1. 'ஒருவி' என்பது ஒரு தமிழ்ச் சொல். 'நீக்கி' என்பது பொருள். 'ஒரு' என்பது பகுதி. மற்றவற்றில் பற்று நீக்கி ஒரு பொருளைச் சேர்தல் என்பது கருத்து.

2. 'கும்பிட்டு' என்பது ஒரு சொல். கும்பகம் இட்டு வணங்குதல் என்பது பொருள். கை குவித்தல், கீழ் விழுந்து வணங்குதல் என்பனவாகப் பெரும்பாலும் கருதுகின்றனர் மக்கள். கும்பிடுதலில் கும்பகம் இட்டு ஈடுபடுதல் சொற்பொருள். உயிர்க் காற்றை உள்ளே வாங்கி மூல நிலத்தில் கும்பகமிட்டுக் குண்டலினியை எழுப்புதல் இதன் கருத்து. இதைக் கும்பகம் என்பர் சான்றோர்.

இவ்யோக நெறி நிற்றல். (சரியையில் யோகம்) இறையருளை வணங்கும் கருத்துடையது. ஆதலால், கும்பிடுதல் என வழக்குக்கு வந்தது.

'கும்பு' எனப் பகுதி கொண்டு, 'கும்பகம்' என விரித்துக் 'குவித்தல்' என்று பொருள் கொள்ளுதற்குரியது.

கை குவித்தல் முதலிய இவையெல்லாம் இறைவனை வணங்குதல் ஆகா. உள்ளம் என்னும் உயிருணர்வு, இறைவன் திருவடியில் ஒன்றுதலே வணங்குதலாகும். உயிருணர்வு மனம் அடங்கிக் குவிதற்குக் 'கும்பகம்' இன்றியமையாதது.

இந்த இரு சொற்களும் திருமந்திரத்தில் வந்தவை.

—அருள்நிதிரு அழகரடிகள்

அந்த உணர்வு எங்கே?

[புலவர் இரா. இளங்குமரன்]

நெஞ்சுக்கு உலகம் தரும் மதிப்பு மிகுதி. வாழ்வையே, 'மனம் போல வாழ்வு' என்பர். திருமணத்தை, 'இருமனம் கூடினுல் திருமணம்' என்பர். நெஞ்சே நேரான சான்று என்பதை, 'நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகம் இல்லை' என்பர். பொய் கூறுதலை விலக்குவாரும், 'நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டா' என்பர். வெறுங் கல்வியுடையவனை 'நெஞ்சிலக்கணம் அறியாதவன் பஞ்சலக்கணம் அறிந்தும் பயனென்ன?' என இழித்துரைப்பர். 'அழகாவது நெஞ்சத்து அழகே' என அழகினை அறுதியிட்டு உரைப்பர். நீதியை வேண்டுவாரும், 'நெஞ்சிலே கை வைத்துக்கூறு' என்று ஆணையிடுவர். 'நெஞ்சினுல் பிழைப்பிலாவ்' எனப் பாவக் கழுவாய்க்கு நெஞ்சு உதவுதலையும் கூறுவர். மெய்யுணர்வுப் பெருக்கால், 'நெஞ்சம் பெருங்கோயி'லாகக் கண்டு 'நெஞ்சம் உமக்கே' என இறைவனுக்குப் படையலாக்கி இறைஞ்சுவர். இன்னவை யெல்லாம் உலகம் நெஞ்சுக்குத் தரும் மதிப்பின் வெளிப்பாடுகளேயாம். ஆனுல் பலர் வாழ்வில், 'நெஞ்சு என்பதொன்றுண்டோ' என்பது வினுவாகவே யுள்ளது.

சுடுசோற்றை அள்ளினுள் ஒரு தலைவி; அள்ளியதை அப்படியே தட்டத்தில் போட்டாள். ஏன்? கைசுட்டு விட்டதா? இல்லை. சுடு நெருப்பிலே சோருக்கிச் சுடச்சுட வடித்துச், சூட்டிலே இறக்கிச் சுவைப்படுத்தத் தேர்ந்த அவள் கை, சூட்டைத் தாங்காமலா போய்விடும்? சோறு கையைச் சுடவில்லை.! நெஞ்சைச் சுட்டு விடுமாம், அப் பஞ்சின் மெல்லியலாளுக்கு! நெஞ்சச் சூடு, அவள் நெஞ்சங்கவர் கள்வனுகி நெஞ்சிலே வீற்றிருக்கும், நேயக் காதலனைச் சுட்டு விடுமாம்! 'அவன் வெந்துவிடக் கூடாதே' என நொந்து உண்ணவில்லையாம்! 'வள்ளுவர்' வரைந்த 'நெஞ்சக் காதல்' கொஞ்சிக் குலவும் ஓவியங்களுள் ஈதொன்று!

அவன் எழுதுகிருன் ஓர் ஓவியம்; சுவரிலா? இரட்டுத் துணியிலா? தாளிலா? இல்லை. உள்ளத் திரையில் எழுதுகிருன். தண்ணீர் வண்ணமோ எண்ணெய் வண்ணமோ எடாமல் தண்ணிய எண்ண வண்ணம் ததும்ப எழுதுகிருன் ஓவியம். எழுதுவதும் எப்படி? 'அழகு என்றுல் அழகு' 'இதுவே அழகு' என்று சொக்குமாறு அந்தச் சொக்கன், சொக்கியை எழுதுகிருன்!

அப்படிச் 'சொக்குப் பொடி' போட்டு மயக்கியிருக்கிருள் அவள். எழுதப் பெற்ற ஓவியம் எவருக்கோ எழுதப் பெற்றதோ? இல்லை ! அவனுக்கு என்றே எழுதப் பெற்றது ! அதனையும் மூடி மறைத்துப் பொதிந்து வைத்துக் கொள்ளாமல் இமைத்த கண் மூடாமல் 'இமையா நாட்டப் பெரியோனும்' நோக்கிக்கொண்டிருத்தற்கே எழுதுகிருன்.

சித்திரத்தில் மலர்ந்த செந்தாமரை சிரிக்குமா ? ஓவியத்தில் உள்ளவள் ஓடி ஆடிக் களிப்பாளா ? அவள் உயிர் ஓவியமாகத் திகழ்கிருள் ஆகலின் காண்கிருள்; களிக்கிருள்; நோக்குகிருள் ; நோக்கெதிர் நோக்குகிருள்; 'தாக்கணங்காக விளங்குகிருள்' அவள், ''ஒருவன் திருவுள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்து இருக்கும் உயிர் ஓவிய''மாகத் திகழ்கிருள். குமரகுருபரர் குறித்த 'தெய்வக் காதல் நெஞ்ச' ஓவியங்களுள் ஈதொன்று.

நெஞ்சம் காதலுக்குத்தானு உறையுள் ? சிலர் கொண்டுள்ள சீரிய நட்பு செவ்விய காதலையும் வென்று விடுமோ ?

காதல், பருவ ஒற்றுமை, பால் வேற்றுமை இவற்றிடையே அரும்பி வளர்வது. நட்போ, பருவ வேற்றுமை பால் ஒற்றுமை இவற்றிடையேயும் இனிதின் அரும்பி இலங்கும் இயல்பினது. காதலோ, புலக் குறும்புக்கு ஓரளவேனும் இடந்தாராது ஒழிவது இல்லை. ஆனல் நட்போ, புலக்குறும்பு புகுதலும் அறியாப் புனிதத்தில் ஓங்குவது. இவற்ருல், காதலையும் வெற்றி கொண்டு விடுமோ கனிந்த நட்பு ?

இயற்கைக் காதலும் இனிய நட்பும் முரண்படுபவை போலத் தோன்றினும் இணையானவையே ! நட்பு, காதலாம்; காதல் நட்பாம்; புறப்படும் இடம் போகும் வழி இவற்ருல் சிலச் சில வேறுபாடுகள் இருப்பினும் முடிவில் இரண்டும் ஒன்ருனவையே ! இத்தகையதை 'நட்புக் காதல்' என்பதா? 'காதல் நட்பு' என்பதா ? எப்படி யுரைப்பினும் ஒப்புக் கொள்பவை அவை.

உயர்வற உயர்ந்த ஒரு நட்புக் காதல் :

சென்னை நகரின் ஒரு பகுதி நுங்கன் பாக்கம். அது நுங்கன் என்பான் ஒருவன் பெயரால் அமைந்ததோர் ஊர். சங்க நாளில் வேங்கட மலைப் பகுதியைப் பாங்குடன் ஆட்சி செய்த வேந்தருள் ஒருவன் நுங்கன். அவன் தந்தை ஆதன். ஆகலின் அவனைச் சான்ருேர் 'ஆதனுங்கன்' என்றனர்.

ஆதனுங்கன் அருங்கொடையாளன். அறிவறிந்த பண்பாளன்; புலவர் தோழமைப் புகழாளன். அவன் பண்பிலே ஊன்றிப் பாடிய புலவர் ஆத்திரையன் என்பார். அவர் கள்வில் என்னும் ஊரினர் ஆகலின் கள்வில் ஆத்திரையனுர் எனப் பெற்ருர்.

ஆத்திரையனுர் ஆதனுங்கனை ஒருகால் கண்டார்; களிப்புற்ருர். அவனே பிரிதல் அறியாப் பெருவிருப்பாளனுகத் தோன்றினுன். அவன் விருப்பும் விழுமிய அன்பும் புலவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அவனை, 'நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து' மகிழ்ந்தார். 'உள்ளுதோறும் உள்ளுதோறும்' உவகை ஊற்றெடுக்க உறவாடினுர்; உரிமை அன்பு நோக்கி உருகினுர். அந் நிலையில் ஆதனுங்கன் 'எம்மை உள்ளுமோ' (எம்மை நினைப்பிரோ) என வினவினுன். அவ் வினுவினுல், புலவர் வியப்பும் விம்மிதமும் ஒருங்கே எய்தினுர்.

"வேந்தே! நின்னை நினைப்பது எப்படி? நின்னை மறந்தால் அன்றே நினைக்க முடியும்? மன்னவ! நுண்ணிய கருவி கொண்டு என் நெஞ்சைத் திறந்து காணவல்லார் ஒருவர் உளராயின், அவர் அங்கே என்ன காண்பார் என்பதை அறிவையோ? நின்னையே காண்பர். இன்னுங் கேள். எனினும் எனக்கு இனியவனே, நீ வினுவியதுபோல் நின்னை மறப்பேன்; ஆம், மறப்பேன்; என் உயிர் என் உடலினின்றும் பிரியும்போது கூட என் நினைவு உள்ள வரை நின்னை மறவேன். என்னை மறந்து போவேன் ஆயின், அண்ணலே, என் செய்வேன்! அப்பொழுதே மறப்பேன்! இரங்கத்தக்க அந் நிலையிலே என் செயலாவது என்னே! இயம்புவாயாக" என்ருர்.

> "எந்தை வாழி ஆத னுங்கவென்
> நெஞ்சம் திறப்போர் நிற்காண் குவரே
> நின்னியான் மறப்பின் மறக்குங் காலை
> என்னுயிர் யாக்கையிற் பிரியும் பொழுதும்
> என்னியான் மறப்பின் மறக்குவென்" (புறம் 175.)

என்பது ஆத்திரையனுர் வாக்கு.

அரசன் ஆதனுங்கன், புலவன் ஆத்திரையன்: புரவலன் ஒருவன், இரவலன் ஒருவன்: மாடமாளிகைக் குரியவன் ஒருவன், கூரைக் குடிசைக் குரியவன் ஒருவன், 'அண்ணல் யானை அணி தேர்ப்புரவி ஆட்பெரும் படையாளன்' ஒருவன், ஏடு எழுத்தாணி கொண்டு பாடு தொழிலாளன் ஒருவன்; இரைவேட் டெழுந்த புலி போன்ற இயல்பாளன் ஒருவன்; கலைந்தோடும் மான் போன்ற

தன்மையாளன் ஒருவன்; செல்வம் செல்வாக்கு, பட்டம் பதவி, பழக்க வழக்கம் இவற்றுல் அமைந்த இடைவெளி பெரிதாயினும் நட்புரிமை அவற்றை அகற்றி நெஞ்சந்திறக்கும் நெருக்கத்தை அமைத்துவிட்டது! இத் தன்மை எதற்கு உண்டு? காதல் நட்புக்கே உண்டு. 'அந்த உணர்வு எங்கே? எங்கே?' என்று அலமர வைக்கிறது இன்றைய உலகம்!

வஞ்சமின்றி நெஞ்சந் திறந்து பழகும் நண்பர் எத்துணைப் பேர்! ஒவ்வொரு கோலம், ஒவ்வொரு நோக்கு, ஒவ்வொரு போக்கு, ஒவ்வோர் எதிர்பார்ப்பு, உள்ளொன்று புறம்பொன்றும் நடிப்பு, உண்மையல்லாப் பசப்பு—இவற்றுல் உருண்டு வரும் நட்புலகில் "என் நெஞ்சந் திறப்போர் நிற்காண்குவர்" என்னும் அந்த உணர்வு வாழ்வைத் தேடிக் காண்டலும் எளிதோ? நெஞ்சால் வாழ்ந்த அந்த வாழ்வு எங்கே? அந்த வாழ்வும் வருமோ?

வழிபாட்டில் வடமொழி

பெரும்பாலும் தமிழருக்குரிய சிவபிரான் கோயில், பெருமாள் கோயில்களில் வழிபாடு ஆற்றுவோர் தொன்றுதொட்டுத் தமிழ் அந்தணர்களாகவே இருக்கின்றனராயினும், அவரும் ஆரியப்பார்ப்பனரோடு தம்மைச் சேர்த்துக் கொள்ளும்பொருட்டு ஆரிய வேதங்களையும் வடமொழியையும் பயன்படுத்துகிருர்கள். சிவபிரானும் திருமாலும் பண்டு தொட்டுத் தமிழ் முதுமக்களால் வணங்கப்பட்டு வந்த தமிழ்த் தெய்வங்களாகும். எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளே தந்தை வடிவிற் சிவபிரான் எனவுந், தாய் வடிவில் திருமால் எனவும் வைத்து வணங்கப்பட்டது. இவ் விருவரும் பிறவாதவர் இறவாதவர். இவ் இரு தெய்வங்களையும் பழைய ஆரியர் சிறிதும் அறியார்.

—மறைமலையடிகள்.

[வேளாளர் நாகரிகம், பக். ககரு]

தமிழின் தலைமையை நாட்டும் தனிச் சொற்கள்

[ஞா. தேவநேயன்]

21. பேசு.

பொள்ளுதல் = துளைத்தல். பொள்ளல் = துளை. பொள் = துளை, உட்டுளை (பிங்.)

பொள்—பொய். ஒ. நோ : தொள் — தொய்.

பொய் = 1. துளை, உட்டுளை. "பொய்பொரு முடங்குகை" (சிலப். 15 : 50) 2. மரப்பொந்து. (பிங்.). 3. உள்ளீடற்றது. 4. விளைச்சலில்லாதது. பொய்ப்பிஞ்சு, பொய்ச்சீப்பு. (உ. வ.). 5. உண்மையில்லாதது. "பொருள் கெடுத்துப் பொய்மேற் கொளீஇ" (குறள். 938). பொய்க்கதை. 6. மாயை. பொய்ந்நீர். (W). 7. நிலையாமை. "புற்புதமே யன்ன பொய்க்குடி வாழ்க்கையை" (திருநூற். 3). 8. போலியானது. 9. செயற்கையானது. பொய்க் கால். 10. ஏமாற்றுவது, பொய்ம்மான், பொய்க்குழி.

பொய்தல் = (செ. கு. வி.) 1. துளைபடுதல். 2. துளைக்கப் படுதல். "பொய்தக டொன்று பொருந்தி" (கம்பரா. பஞ்ச. 49). 3. துளையினின்று ஒழுகுதல் —(செ. குன்றுவி.) 1. சொரிதல். "இகலின் பொய்த" (கம்பரா. கிங்கரர். 50). 2. வீழ்த்துதல். "அவை பார்சோரப் பொய்தான்" (கம்பரா. அட்ச. 33).

பொய்—பெய். பெய்தல் = (செ. கு. வி.) மேனின்று ஒழுகுதல். "பெய்யெனப் பெய்யும் மழை" (குறள். 53)—(செ. குன்றுவி.) 1. வார்த்தல். "பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்" (புறநா. 115). 2. கல முதலியவற்றில் இடுதல். "உலைப்பெய் தடுவது போலுந் துயர்" (நாலடி. 114). 3. சிறுநீர் கழித்தல். 4. தூவுதல்.

பெய்—பேய். பேய்தல் = பெய்தல் (உ. வ.). "பேய்ந்துங் கெட்டது, ஓய்ந்துங் கெட்டது" (பழ.) இப் பழமொழியிற் பேய்ந்தும் என்னும் சொல் ஓய்ந்தும் என்பதனொடு எதுகை நோக்கித் திரிந்ததை, "பாட்டுரை நூலே" என்னும் தொல்காப்பிய நூற்பா (செய். 78) நீட்டும் வழி நீட்டல் என்னும் செய்யுள் திரிபாக அமைக்க இடந்தருமேனும், கொச்சையென்று கருதப்படும் இரண்டோர் உலக வழக்குச் சொல் வடிவினின்றும் இலக்கியச்

சொற்கள் அமைந்திருப்பதால், பேய்தல் என்னும் சொல்லைத் திரிபின் பாற்பட்டதாகக் கொள்வதே தக்கதாம்.

எ - டு: கொண்டுவா—கொண்டா—கொணு—கொணர்.

இச்சொல் வடிவுகளுள், கொண்டா என்பது வழுநிலையாகவும், அதன்வழிப்பட்ட கொணு, கொணர் என்பன வழாநிலையாகவும், இருத்தலை நோக்குக.

பேய்—பேயு—பேசு. ஒ. நோ: தேய்—தேயு—தேசு.

பேசுதல்=வான் நீரை ஒழுக விடுவது போன்று வாய் சொல்லை ஒழுக விடுதல்.

ஒழுகுதல் ஓட்டையினின்று விழுதல் அல்லது சிந்துதல், கலத்தினின்று நீர் வார்த்தல் என்பது, அதன் வாயாகிய ஓட்டை வழி ஒழுக விடுதல். வான் மழை பெய்வது கலத்தினின்று நீர் வார்த்தல் போன்றிருத்தலால், "வானின் றமையா தொழுக்கு" (குறள். 20) என்ருர் திருவள்ளுவர்.

மழை தூறலுங் கொட்டுதலுமின்றி நடுத்திறமாகப் பெய்யின் பெய்தலென்றும், கொட்டுதலும் ஊற்றுதலும் போலக் கனத்துப் பெய்யின் பொழிதல் என்றும், சொல்லப்படும்.

பொழிதல்-திரளுதல். பொழித்தல்-திரட்டுதல். பொழிப்புரை-திரட்டுரை. பொழில்-திரண்ட சோலை.

ஒருவர் இயல்பாகச் சொல்லாடல் மழை பெய்தல் போன்றிருத்தலாற் பேசுதல் என்றும், விரைவாகச் சொல்லாடல் மழை பொழிதல் போன்றிருத்தலாற் பொழிதல் என்றும், சொல்லப்படுதல் தொன்று தொட்ட வழக்கமாயிருந்து வருகின்றது. 'ஒரு மணி நேரம் பொழிந்து தள்ளி விட்டார்' என்னுங் கூற்று, கல்லா மக்கள் வாயினின்று வருவதையுங் காணலாம். இவ் வழக்கினின்றே, சொற்பொழிவு, சொற்பொழிவாளர் என்னுங் கூட்டுச் சொற்கள் இக் காலத்தில் தோன்றியுள்ளன. இதனல், பொழிதல் என்னும் சொற் போன்றே பேசுதல் என்னும் சொல்லும் மழை வினையொப்புமை பற்றித் தோன்றியதென உணரலாம்.

சமற்கிருதச் சொற்கள்

பேசு என்னுந் தென்சொல்லினின்றே, பாஷ் (bhash, என்னும் வடசொல்லும் திரிந்துள்ளது. இதை யுணர்ந்தே) சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியைத் (Tamil Lexicon)

தொகுத்த வடமொழி வெறியரும், 'பேசு' என்னும் தலைச்சொல்லை யடுத்து "cf. bhāṣ" என்று குறித்திருக்கின்றனர்.

bhash, to speak, talk, say, tell.

bhashaka, speaking, talking about, Kāv.

bhashana, the act of speaking, talking, speech, talk, Nir; Mn; MBh.

bhasha, Speech, language (esp. common or vernacular Speech as opp. to Vedic or in later time to Sanskrit) Nir; Pān; Mn; MBh; any Prākrit dialect or a particular group of 5 of them. (Maharāshtri, Ŝauraseni, Māgadhī, Prācya and Avantī, also called Pañca vidhā bhāshā.

bhashika, belonging to the common or vernacular speech, Nir.

bhashita, spoken, uttered, said, spoken to, addressed, Mn; MBh.

bhashitarya, to be spoken to or addressed, R.

bhashitri, a speaker, talker, SBr; MBh; Kāv.

bhashin, saying, speaking, loquacious, MBk; Kāv.

bhashya, speaking, talking, Susr; any work in the common or vernacular speech, VPrāt. GrS; Hariv; an explanatory work, exposition, explanation, commentary esp. on technical sutras, Name of Patañjali's commentary on the sutras of Pāṇini, mahā·bhāshya.

sam–bhash, to speak together, converse with, speak to, join in a conversation.

sam-bhashana, conversation, discourse with.

subhashana, Name of a person.

subhashita, spoken well or eloquently.

subhashitam, good or eloquent speech, witty saying.

கிரேக்கச் சொற்கள்

Gk. phasis, speech, utterance, expression.

aphasia, loss of speech, or of understanding of language, owing to brain damage; f. **mod. L. f. Gk.** *aphatos*, speechless (*a*, not, *pha*, to speak).

A அல்லது a என்ற (கிரேக்க) எழுத்திற்குக் கிரேக்கத்தில் அ, ஆ என்ற ஒலிகளே உள. ஆதலால், பேசு என்ற சொல்லே, இந்திய ஆரியரின் முன்னோர் கிரேக்க நாட்டிற்குப் பக்கத்தில் வாழ்ந்து வந்தபோது, அவர் மொழியில் பாஷ் (bhāsh) என்றும், கிரேக்க மொழியிற் பா (phā) என்றும், திரிந்திருத்தல் வேண்டும்.

கிளேன் (Klein) ஆங்கிலச் சொற்பிறப்பியல்
அகரமுதலிச் சொற்கள்

"**aphasia**, n., loss of the faculty of speech (med.)—Medical L., fr. priv. pref. **a**—and *phasis*, speech, from the base of *phanai*, to speak, which is rel. to *phame*, voice, report, rumour, and cog. with **L.** *fama*, talk, report, rumour" (p. 42).

"**aphemia**, n, a kind of aphasia (med.)—Medical **L.** coined by the French surgeon and anthropologist Paul Broca (1824—80) in 1860 fr. priv-pref. **a**—and **Gk.** *pheme*, voice, which is rel. to *phanai*, to say, speak." (p. 42).

"**fama**, n., the personification of rumour in Roman mythology." (p. 273).

"**fame**, n. **F.** *fame*, fr. **L.** *fama*, talk, report, rumour, tradition, reputation, lit, 'saying', from the stem of *for*, *fārī*, pp. *fatus*, to speak, rel. to *fatēri*, to confess, *fabula*, narrative, account, tale, story, *fas*, divine law (lit. utterance, fr. **I. E.** base, *bhā*, to speak. tell, say, whence also **OI** *bhanati*, speaks, Arm. *bay*, gen. *bayi*, word, term, *bey*, he said, *ban*, gen. *bani*, word, speech, judgment, **Gk.** *phemi*, I say; *pheme*, Dor. *phāmā*, voice, report, rumour, *phatis*, saying, speech, report, OSlav *bajo*, *bajati*, to talk, tell, *basni*, fable, tale, charm, **OE**. *boian*, to boast, **ON.** *bōn*, **OE.** *bēn*, prayer, request. Cp. **phone**, speech sound, Cp. also **abandon**, **affable**, **aphasia**

aphemia, apophasis, ban, to prohibit, **ban,** ediet, **bandit, banish, bifarious, blame, blaspheme, boon, confabulate, confess, defamation, defame, euphemism, fabulous, famous, fascinate, fate, infamous, infamy, infant, infantry; multifarious, nefarious,—phasia,—phemia, Polyphemns, preface, prefatory, profess, prophet, trifarious.''** (p. 273).

இங்ஙனம், பேசு என்னும் சொல் பே—phe—fe என்றும், பாசு (bhāsh)—பா (bhā)—bhā—phā—fā என்றும், பிறவாறும், திரிந்து பல்வேறு சொற்களை மேலையாரியத்தில் தோற்றுவித்துள்ளது.

ஆயின், ban, ben, bon முதலிய சொற்கள் பன் என்னும் தென்சொல்லினின்று திரிந்திருத்தல் வேண்டும். மேலையறிஞர் தம் மொழியின் தமிழ் மூலத்தையும் தமிழின் தொன்மையையும் இன்னும் அறியாமையால், இத்தகைய பற்பல தவறுகள் நேர்ந்துள்ளன.

பன்னுதல் = 1. சொல்லுதல், பேசுதல், ''பன்னியிரக்கும்'' (கம்பரா. கைகேயி. 41). 2. ஒன்றைத் திரும்பத் திரும்பச் சொல்லுதல் அல்லது எழுதுதல். 3. நின்று நின்று பேசுதல் அல்லது படித்தல். 4. வாசித்தல் அல்லது படித்தல்'' ஓலை...... வாங்கிப் பன்னுவனே (பிரமோத். 13 : 50). 5. புகழ்தல். ''என்னுவினுற் பன்ன வெம்பிரான் வருக'' (திருவாச, 5 : 99). 6. பாடுதல். ''பல்கீதமும் பன்னினுர்'' (தேவா. 408 : 3).

ச—ன(ந), ன—ம, ப—ph, ph—f, ph—bh முதலிய திரிபுகள் இயல்பேயாதலால், பேசு என்னும் சொல்லிலுள்ள பகரமும் சகரமும் மேலையாரிய மொழிகளில் மேற்காட்டியுள்ளவாறு பல்வேறு எழுத்துக்களாகத் திரிந்துள்ளன.

———

தமிழ் மொழியமைப்பை விளக்கும் தனிவகுப்பு

உலக முதல் உயர்தனிச் செம்மொழியும் திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமான தமிழை, குமரிநாட்டு மக்கள் எங்ஙனம் தோற்றி வளர்த்தனர் என்பது பற்றி, 1880ஆம் ஆண்டு மே மீ நாள்தொறும் எற்பாடு (சாயுங்காலம்) 5-இலிருந்து 6மணி வரை, மறைமலையடிகள் நூல்நிலைய வள்ளலார் மண்டபத்தில், மொழிநூல் மாணவர் ஞா. தேவநேயர் விளக்கவகுப்பு நடத்துவார். அதற்குக் கீழ்க்குறித்த முப்பத்தொருவர் தெரிந்தெடுக்கப் பட்டுள்ளனர். அவருள் வர இயலாதவர் உடனே 'செல்வி' யாசிரியர்க்குத் தெரிவிக்க. வராதவர் இடத்தில் தக்கார் பிறர் சேர்த்துக் கொள்ளப் பெறுவர்.

1. திரு. மகராசனர்
2. ,, சண்முக சுப்பிர மணியனுர்
3. ,, கீ. இராமலிங்கனுர்
4. ,, ஞானகிரி நாடார்
5. பர். கி.ஆ.பெ.விசுவநாதம்
6. ,, சி. பாலசுப்பிர மணியனுர்
7. ,, ஒளவை நடராசனுர்
8. ,, ச. வே. சுப்பிர மணியனுர்
9. ,, தங்கவேலனுர்
10. ,, சொ. சிங்காரவேலனுர்
11. ,, மெ. சுந்தரனுர்
12. ,, ஞானசிகாமணியர்
13. பேரா. கா. அப்பாத் துரையார்
14. ,, அசரியா
15. ,, இரா. மதிவாணனுர்
16. ,, மு. சதாசிவம்
17. ,, அ. கி. பரந்தாமனுர்
18. திரு. பூங்காவனம்
19. பர். சித்தர் கிருட்டிண மூர்த்தியார்
20. பேரா. நிலவழகனுர்
21. புலவர். செங்கைப் பொதுவனுர்
22. பேரா. வீ. ப. க. சுந்த ரனுர்
23. புலவர். சரவணத் தமிழனுர்
24. ,, நக்கீரனுர்
25. ,, கூவலூர் முனியப்ப னுர்
26. ,, இரா. இளங்குமரனுர்
27. ,, தெய்வநாயகம்
28. அறிஞர் ஏ. கே. வேலனுர்
29. ,, இராகவனுர்
30. பாவலரேறு பெருஞ் சித்திரனுர்
31. பர். உழுந்தூர்ப் பேட்டைச் சண்முகனுர்.

குறிப்பு: வகுப்பாசிரியனுக்குப் போகவர இயங்கி யேற்பாடு செய்தல் வேண்டும்.

தீர்ப்பாளர் மகராசனூர் திருவள்ளுவர்*

[ஞா. தேவநேயன்]

தமிழ் நாட்டரசுச் சட்டவியற் குறியீடுகள் மொழிபெயர்ப்புக் குழுத்தலைவர் ஓய்வு பெற்ற சென்னை உயர்மன்ற நடுத்தீர்ப்பாளர் திரு. மகராசனூர் எழுதி, புதுத்தில்லி இலக்கிய மன்றம் (Sāhitya Akademi) வெளியிட்ட, 'திருவள்ளுவர்' (Tiruva!luvar) என்னும் ஆங்கிலச் சின்னூலைப் பார்வையிட்டேன்.

அதன் அட்டை முகத்திலுள்ள ஒரு முனிவர் உருவப்படம் முதற்கண் என் கண்ணைக் கவர்ந்தது. அது திருவள்ளுவர் உருவப்படம் என்று கண்டேன். இதற்கு முன் பத்திற்குக் குறை யாத திருவள்ளுவர் உருவப் படங்கள் வெளிவந்தும், புலவர் தெய்வநாயகம் தம் 'திருவள்ளுவர் கிறித்தவரா?' என்னும் பொத்தக அட்டை முகத்திற் பொறிப்பித்தது ஒன்று தவிர, ஏனையவெல்லாம் திருவள்ளுவர் இனப்பான்மைக்கோ மனப்பான்மைக்கோ சற்றும் பொருந்தாமலேயிருந்தன. இன்று, மகராசனூர் சுவடிப்படம் புலவர் தெய்வநாயகம் வகுத்ததினுஞ் சற்றுத் திருந்தியிருத்தல் கண்டு, கழி மகிழ்கொண்டு ஒரு கவலையும் விண்டேன்.

இனி, சுவடிப் புறத்துள்ள வரையோவியம் போன்றே அகத் துள்ள உரையோவியமும் திருந்தியிருக்குமோ என்னும் ஐயமும், ஒரு சில பக்கங்களைப் புரட்டியவுடன் அறவே அகன்றது.

திருக்குறட்கு, இதுவரை எத்தனையோ உரைகள் தமிழிலும் பல அயன் மொழிகளிலும் வெளிவந்துள்ளன. எனினும், இன்னும் எவரும் அந் நூலின் நயங்களையெல்லாம் சொல்லி அல்லது கண்டு தீர்ந்த பாடில்லை. ''நவில் தொறும் நூன்யம் போலும்'' என்ற திருவள்ளுவர் திருவாய் மலர்விற்கு, அவர் நூலே எடுத்துக்காட்டா யிருந்து வருகின்றது.

இந் நூற்றாண்டுத் தொடக்கத்தில், பாலவநத்தம் வேள் பாண்டித்துரைத் தேவர் அரும்பாடு பட்டுத் தொகுத்து வைத்திருந்த, ஆயிரக் கணக்கான அரிய பண்டைத் தமிழ் ஏட்டுச் சுவடிகள், அவர் நிறுவிய மதுரைத் தமிழ்ச் சங்கப் பொத்தகக் களஞ்சியத்தில், யார் சூழ்ச்சியாலோ, ஒருநாள் திடுமென்று எரியுண்டு சாம்பராயின. அவ் வேட்டுத் தொகுதியுள், இதுவரை அச் சேராத பத்துத் திருக்குறளுரையும் இருந்ததாகச் சொல்லப்படுகின்றது. அவற்

*Tiruvalluvar by Justice S. Maharajan, Sahitya Akademy, New Delhi. 1979.

றிற்கு முன்னும் இயற்கையாகவும் செயற்கையாகவும் அழியுண்ட திருக்குறளுரைகள் எத்தனையோ, அவை புலப்படுத்திய சிறப்பு நயங்கள் என்னென்னவோ, அறியோம்.

பொதுவாக, பாட்டிற்கும் நூலிற்கும், குறிப்புரை, சொல்லுரை, சொற்றொடருரை, பொழிப்புரை, கருத்துரை, சிற்றுரை, விரிவுரை (பேருரை, விளக்கவுரை) என உரைகள் எழுதிறப்படும். அவை முழு நூற்குமோ, அதன் ஒரு பகுதிக்கு மட்டுமோ இருக்கலாம். பகுதியுரையும், தொடர்ச்சியான ஒரு பகுதிக்கோ, அங்கு மிங்கும் தெரிந்தெடுக்கப்பட்ட சில பல பாவிற்கோ இருக்கலாம்.

எண் வகை வனப்பாக வகுக்கப்படும் நூற்றுக்கணக்கான பனுவல் வகைகளும், இசை நாடகம் கணியம் மருத்துவம் அறிவியல் கம்மியம் முதலிய அறமல்லாத பிற நூல்களுமாயின், ஆசிரியன் வரலாற்றுத் தொடர்பின்றியே பெரும்பாலும் மூலமும் உரையும் இயலும். நல்வழியும் திருக்குறளும் போன்ற அறநூலாயின், ஆசிரியன் தன் வாழ்க்கையிற் கடைப்பிடித்த நெறி முறைகளையே அவன் நூலும் மறுநிழலிட்டுக் காட்டுதலால், ஆசிரியன் வாழ்க்கை வரலாறு அவனியற்றிய அறநூலொடு வெளிப்படையாகவோ குறிப்பாகவோ இரண்டறப் பின்னிக்கிடக்கின்றது. இதனால், திருவள்ளுவரின் வாழ்க்கைச் செய்திகள் பல அவரியற்றியருளிய திருக்குறளாலேயே விளக்கம் பெறுகின்றன.

இதை யுணர்ந்தே திரு. மகராசனும், திருவள்ளுவர் ஒப்புயர்வற்ற உலகப்பொது அறநூலாசிரியராதலாலும், அவர் பெருமையும் தலைமையும் தமிழ்ப் பகைவரால் இயன்றவரை மறைக்கப்பட்டு வருதலாலும், அவரைப் பின்பற்றிப் போற்றுவதனாலேயே தமிழர் தம் ஆரிய அடிமைத் தனத்தினின்று மீண்டு தம் முன்னோர்போல் முன்னேற முடியுமாதலாலும், ஆசிரியர்க்கே சிறப்புக் கொடுத்துத் தம் சின்னூற்குத் திருவள்ளுவர் என்றே பெயரிட்டு, அவர் அருமை பெருமைகளை அகச்சான்று கொண்டே விளக்கிக் காட்டுகின்றார்.

மகராசனார் திருவள்ளுவரின் சிறப்பியல்கள்

இதுவரை ஏனையுரையாசிரியர்க்கும் ஆராய்ச்சியாளர்க்கும் புலனாகாது, திரு. மகராசனார்க்குப் புத்தம் புதுவதாகத் தோன்றிய திருவள்ளுவர் எழு சிறப்பியல்கள் வருமாறு :

1. இம்மையையும் மறுமையையும் ஒன்றுயிணைத்தவர்

இதுவரை உலகில் தோன்றிய பல்வேறு மதத் தலைவரும் குரவரும், உலகியலையும் மதவியலையும் இருவேறாகப் பிரித்து

இம்மையையும் மறுமையையும், வெவ்வேறுலகத்திலும் வெவ்வேறு காலத்திலும் ஒன்றன்பின் ஒன்ருக நிகழும் இருவேறு வாழ்க்கை நிலைகளாகவே கூறியுள்ளனர். திருவள்ளுவரோ, அவ்விரண்டும் இம்மையிலேயே இவ்வுலகத்திலேயே ஒருங்கே நிகழக் கூடியவை யென்றும், மக்களுள்ளும் ஒருசாரார் தேவரா யிருத்தலொண்ணு மென்றும், மண்ணுலகமும் அவர்க்கு விண்ணுலகமேயென்றும், கூறியுள்ளார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்." (50)

"செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்
ஆன்ருரோ டொப்பர் நிலத்து." (413)

"ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து." (353)

"ஆரா வியற்கை யவாநீப்பின் அந்நிலையே
பேரா வியற்கை தரும்." (370)

"முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்." (385)

"ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்." (702)

என்னும் குறள்கள் இதற்குச் சான்று பகரும்.

2. பல்வகைப்பட்ட மக்களொடு பழகியறிந்தவர்

திருவள்ளுவரைக் காணவும் கண்டுரையாடவும் புலவர் பலர் அவ்வப்போது அவர் இல்லம் வந்திருப்பர். மாலை நேரம் மயிலைக் கடற்கரை யோரம் உலாவப் போந்தவிடத்து, வழக்கமாகவும் புதிது புதிதாகவும் பலர் தலைக்கூடி அளவளாவியிருப்பர். கருத் தொத்த புலவர் பிரிவின்கண் மனம் வருந்தியதையும், அறிவிலாப் பேதையர் பிரிவின்கண் மனம் வருந்தா திருந்ததையும்,

"உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்." (394)

"பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன் றில்.' (839)

என்னுங் குறள்களாலும்,

ஓர் உண்மையை எத்துணை விரிவாகவும் தெளிவாகவும் விளக்கியும் தான் கொண்டதே கோலமென்று வலித்த முரண்டன் ஒருவன் செய்தியை,

"காணாதாற் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாந் தான்கண்ட வாறு." (849)

என்னும் குறளாலும் குறித்திருக்கலாம்.

"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்" (64)

"மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பஞ் செவிக்கு," (65)

"குழலினிது யாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்." (66)

என்னுங் குறள்கள், திருவள்ளுவர்க்குப் மக்கள் பலர் இருந்தமையைத் தெரிவிக்கும். இங்ஙனமே பிறவும்.

3. அறத்தை அறத்தின் பொருட்டே வலியுறுத்தியவர்

ஏனை அறநூலாரெல்லாம், நல்விளைவைச் சுட்டி ஆசை காட்டி ஏவல் (விதி) அறவினையையும், தீ விளைவைச் சுட்டி அச்சமூட்டி விலக்கறவினையையும், செய்யுமாறு தூண்டியிருக்க; திருவள்ளுவரோ, சிறிதும் விளைவை நோக்காதும் தீமையே விளையினுஞ் சிறிதும் அஞ்சாதும், உடன்பாடும் எதிர்மறையுமாகிய இருவகை அறவினைகளையும் அறம் நோக்கியே செய்தல் வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

"நல்லா றெனினுங் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று." (222)

"ஒப்புரவி னால்வருங் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து." (220)

என்னுங் குறள்களை நோக்குக.

4. எல்லா நிலைமையிலும் மாந்தன் இயல்பை ஆய்ந்தறிந்தவர்

உறவும் எதிரும் பற்றிப் பல்வேறு வகைப்பட்ட இரட்டைப் பகுப்பு (dichotomy) நிலையில், ஒவ்வொருவரும் கொண்ட குணத்தைப் பாராட்டியும், செய்யுங் குற்றத்தைக் கண்டித்தும், செய்ய

வேண்டிய கடமையை எடுத்துரைத்தும், நல்வழிப் படுத்தியவர் திருவள்ளுவர்.

இறைவன்—அடியான், அரசன்—குடிவாணன், கணவன்—மனைவி, தந்தை—மகன், இல்வாழ்வான்—துறவி, செல்வன்—வறியன், கற்றோன்—கல்லான், தாளாளன்—சோம்பேறி, இரவலன்—புரவலன், சிறியர்—பெரியர், வலியன்—மெலியன், சான்றோன்—கயவன், நண்பன்—பகைவன், உட்பகை—வெளிப்பகை, நோயாளி—நோயிலி, இளையன்—முதியன், குறுவாழி—நெடுவாழி முதலியன இரட்டைப் பகுப்புகள்.

எ - டு: **தந்தை—மகன்**

"தந்தை மகற்காற்றும் நன்றி அவைபத்து
முந்தி யிருப்பச் செயல்." (67)

"மகன்றந்தைக் காற்றும் உதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்." (70)

இல்வாழ்வான்—துறவி.

"துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை." (42)

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்." (28)

தாளாளன்—சோம்பேறி

"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்." (616)

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை." (594)

"நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்." (605)

இங்ஙனமே ஏனையவும்.

5. மக்களெல்லாரையும் சான்றோராக்கத் திட்டமிட்டவர்

ஒருவன் இளமையிற் கல்லாதவனாயினும் கற்றோரையடுத்து அவர் சொற்பொழிவுகளை ஒழுங்காகக் கேட்டும் கல்விமானாகலாம் அல்லது அறிவுடையலாம் என்பதை,

"கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்(கு)
ஒற்கத்தின் ஊற்றாந் துணை." (414)

"செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து." (413)

என்னுங் குறள்களால் பெறவைத்தார் திருவள்ளுவர். இனி, அவர்,

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்(கு)
இனத்தியல்ப தாகும் அறிவு." (452)

"மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்." (455)

என்றும் கூறினர்.

நல்லோர் கூட்டுறவால் ஒருவன் நல்லோனாகலாம் என்பதை, பின்வரும் ஆங்கிலப் பழமொழிகளும் தெரிவிக்கும்.

Tell me the company you keep, and I will tell you what you are. Tell me your friend and I will tell you your character. Tell me with whom thou goest and I will tell thee what thou doest. He that walketh with the virtuous is one of them. Keep good company and you shall be of the number.

அறிவும் நற்குணங்களும் நிறைந்தவனே சான்றோன். சாலுதல் நிறைதல். சால்வது சால்பு. சால்புடையோன் அல்லது சான்றவன் சான்றோன்.

"குணநலம் சான்றோர் நலனே." (982)

"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)
ஐந்துசால் பூன்றிய தூண்." (983)

என்றார் திருவள்ளுவர்.

"ஈன்றுபுறந் தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே" (புறம். 312)

என்று ஒரு மறக்குலத்தாய் கூற்றாகப் பொன்முடியார் பாடியுள்ளார்,

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்" (67)

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்" (69)

"மகன்றந்தைக் காற்றும் உதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்" (70)

என்றதனால், ஆறறிவு படைத்து உயர்திணை யென்று உயர்த்திச் சொல்லப்படும் மக்களினத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் சான்றோனாதல் வேண்டுமென்பதே, திருவள்ளுவர் நோக்கமாம்.

6. இல்லறத்தை நல்லற மாக்கியவர்

மேனாட்டுக் கிறித்தவக் குரவர் இரண்டொருவர் மட்டுமன்றி, தமிழ்நாட்டுத் துறவியார் ஒருவரும், திருக்குறட் காமத்துப்பால் என்னும் இன்பத்துப்பாலைப் பிறழவுணர்ந்து, திருக்குறள் துறவியர் கற்கத் தகுந்த நூலன்று என்று புறக்கணித்துள்ளனர். இனி,

"நோய்கொண்டா லுங்கொளலாம் நூறுவய தாமளவும்
பேய்கொண்டா லுங்கொளலாம் பெண்கொள்ள லாகாதே"

என்று பெண்ணினத்தைப் பழித்த சிவப்பிரகாசஅடிகட்கும் மேல், பெண்ணுடம்பையே பிணக்கூறு போற் சின்ன பின்னமாகச் சிதைத்து, இம்மையின்பத்தை அறவே வெறுப்பவர் போல் இறைவனை இழித்தும் பழித்தும் அறிவிலியாக்கியுள்ள சில துறவியருமுளர்.

மற்ற உயிரினங்களைப்போன்றே மக்களினத்தையும் இறைவனே ஆணும் பெண்ணுமாகப் படைத்து, இனப்பெருக்கத்தை இன்ப நுகர்ச்சியொடு இரண்டறப் பிணைத்திருக்கின்றான். பெண்ணைப் பழிப்பவர், இறைவனையும் பெற்ற தாயையும் ஒருங்கே பழிப்பவராவர்.

ஒவ்வொரு மொழியிலும், சிறந்த இலக்கியத்திற் பெரும்பகுதி பெண்பற்றி யெழுந்ததே. இறைவனுக்கும் பத்தி முற்றிய அடியானுக்கும் இடைப்பட்ட உறவிற்கு, காதலன் காதலியுறவே உகந்த உவமமாகின்றது.

தமிழ்ப்பொருளிலக்கணத்தைச் சேர்ந்த அகப்பொருளே திருக்குறளின்பத்துப் பாலிற்கு அடிப்படையாயினும், திருக்குறள் அறநூலாதலின், இன்பமொன்றே நோக்கிய இலக்கணநூல் போலாது, அறமும் இன்பமும் ஒருங்கே நோக்கிய ஒருவகைத் தனிக்கோவைப் பாடலே திருவள்ளுவர் இன்பத்துப்பால் என்பதை அறிதல் வேண்டும். ஆகவே, இலக்கண அகப்பொருளிற் போல் முன்பின்னாக மணக்கப்படும் பல தலைவியரும், இடையிடை தொடர்பு கொள்ளும் பரத்தையரும், திருவள்ளுவர் இன்பத்துப்

பாலில் இல்லவேயில்லை, என்பது வெளிப்படை. பொருட்பாலில் உள்ள 'பிறனில் விழையாமை' 'வரைவின்மகளிர்' என்னும் அதிகாரங்களும் இதை ஐயந்திரிபற வலியுறுத்தும். எனவே, ஒரே கற்புக்காதலனும் ஒரே கற்புக்காதலியும் முதலிலிருந்து முடிவுவரை நுகரும் காமத்துக் காழில் கனியான ஈடிணையற்ற பேரின்பமே, திருவள்ளுவர் இன்பத்துப்பாற் பொருள் என்று தெளிக. இவ்வகையில் இது பரத்தையிற் பிரிவு கூறும் திருச்சிற்றம்பலக்கோவையினும் மிகச் சிறந்ததாகும்.

''அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்'' என்று மாமூலனாரும், ''இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கும்'' என்று நரிவெரூஉத்தலையாரும், ''இன்பத் திறமிரு பத்தைந்தால்'' என்று மதுரைப் பெருமருதனாரும், ''இன்பு சிறந்த நெய்'' என்று நப்பாலத்தனாரும், ''இன்பின் திறனறிந்தேம்'' என்று தேனீக் குடிக்கீரனாரும், திருவள்ளுவ மாலையிற் பாடியிருப்பதால், இன்பத்துப்பால் என்றே ஆசிரியராற் பெயரிடப்பட்டிருந்து பின்னர்க் காமத்துப்பால் என்று சிலரால் மாற்றப்பட்டுப் பரிமேலழகராலும் தழுவப்பட்டிருத்தல் வேண்டும்.

காமத்துப் பால் என்ற பெயரைக் கண்டவுடன் அப்பால் **வாற்சாயனர்** காமசூத்திரத்தைத் தழுவியதென்று கொண்டுவிட்டார், தமிழைக் காட்டிக் கொடுப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்த வையாபுரிப்பிள்ளை. காதலின்பத்தையும் அறத்தையுங் கடுகளவுங் கருதாது புணர்ச்சி வினையே சிறந்த பொருளாகக் கொண்டு, பொது மகளிரொடும் பிறர் மனைவியரொடும் புணரும் பெருந்திணைக் காமத்தைக் கூறும் பரத்தை நூல் (pornography) தெய்வக் காதலைக் கூறும் திருக்குறள் இன்பத்துப் பாலினின்று பெரிதும் வேறுபட்டதாகும்.

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருட்பாகுபாடு பற்றி இன்பத்துப்பால் என்றொரு தனிப் பகுதியில் இன்பம் பிரித்துக் கூறப்பட்டிருப்பினும, உண்மையில் அது அறத்துப்பாலில் இல்லறவியலொடு இணைந்ததே. இவ் வுலகில் தலையான இன்பம் பெண்ணின்பம். அது இல்வாழ்வான் தன் வாழ்க்கைத் துணையான மனைவியிடம் பெறுவது. அறம் செய்து இல்வாழும் வாழ்க்கை இல்லறம். அதற்கு இன்றியமையாத நிலையான துணை மனைவி. ஆகவே, அறப் பயனும் இன்பமும் ஒரே வாழ்க்கை நிலையிற் பெறப்படுகின்றன. நிலையான காதன் மனைவியிடம் பெறும் இன்பமே உண்மையானது; சிறந்தது. நிலையில்லாத காதலற்ற பொது மகளிர் தரும் இன்பம் பொய்யானது; இழிந்தது. அதனால்,

"பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று". (913)

என்றார் திருவள்ளுவர்,

இறைவனால் இணைக்கப்பெற்ற கற்புடைக் கணவனும் மனைவியும் காதலொடும் மனத் தூய்மையொடும் அறஞ் செய்து வாழும் தெய்வத்தன்மையான இல்லறம், துறவறத்தினும் நல்லறம் என்பது, திருவள்ளுவராலும் பிறராலும் முடிந்த முடிபாகத் தீர்க்கப் பட்ட தீர்ப்பாதலால், திருவள்ளுவரின் இன்பத்துப்பாலை இகழ்பவர் இறைவன் ஏற்பாட்டை இம்மியும் அறியாதவரேயாவர். ஆகவே, பேரின்ப நுகர்ச்சியை அல்லகூறி (Allegory) போல் உவமையாகக் காட்டும், இன்பத்துப்பால், மறை நூலின் பாற்படுமேயன்றி வடவர் காம நூலாகாது.

7. சொற்றிறன் முற்றுங் கற்றவர்

திருவள்ளுவர், ஒரு தமிழ்ப் பேரகரமுதலித் தொகுப்பாசிரியர் போல் தமிழ்ச் சொற்றொகுதி யனைத்தையும் அறிந்தவர்; தொல் காப்பியத்தினுஞ் சிறந்த மூவதிகார முற்றிலக்கண நூலாசிரியர் போல், தலைசிறந்த இலக்கணப் புலமை வாய்ந்தவர்; இக்காலச் சொல்லாராய்ச்சியாளர்போல் சொற்களின் அமைப்பையும் பல்வேறு வடிவங்களையும் அவற்றின் சிறப்புப் பொருள்களையும் ஆய்ந்தவர்; ஓரளவு புதுச் சொற்களையும் புனைந்தவர். அவர் கூற்றுக்களினின்று பின்வருமாறு அவர் சொல்லியல்பையும் சொல்வன்மையையும் உய்த்துணரலாம். என்றும் அகனமர்ந்தும் முகனமர்ந்தும் இன் சொற் சொல்பவர் (92), ஒருபோதும் பயனில சொல்லாதவர் (190—200), கேட்பாரை வயப்படுத்திப் பகைவரும் விரும்புமாறு சொல்பவர் (643), தன்சொல்லை வெல்லுஞ் சொல் இல்லாதவாறு சொல்பவர் (645), சோராதும் எவருக்கும் அஞ்சாதும் சொல்பவர் (647), கோவைபட இனிது சொல்பவர் (648), பொருள்பெருக்கிச் சொற் சுருக்கிச் சொல்பவர் (649), பிறர்க்குத் தெளிவாக விளங்கச் சொல்பவர் (650), அவையறிந்து சொல்லின் தொகையறிந்து சொல்லுந் தூய்மையர் (711), வேளையறிந்து நன்குணர்ந்து சொல் பவர் (712), நுண்ணறிஞர்முன் நுண்ணறிஞராயும் புல்லறிஞர் முன் புல்லறிஞர் போன்றும் சொல்பவர் (714), அறிவால் மூத்தோர்முன் முந்திச் சொல்லாதவர் (715), அறியும் ஆற்றல் இல்லாதவரிடை ஒன்றுஞ் சொல்லாதவர் (719).

இனி, குறியெதிர்ப்பை (221), வைப்புழி (226), நெடுநீர் மறவி மடிதுயில் (605) என்னுஞ் சொற்களால், அவரது தகுந்த சொல்லையாளுந் திறமும் அறியப்படும்.

(தொடரும்)

கழக நூலாசிரியர் திரு. என். கே. வேலன் மறைவு

கழக நூலாசிரியர்களுள் ஒருவரும் கடந்த நாற்பது ஆண்டு கட்கு மேலாகக் குழந்தைகட்காக ஏறத்தாழ நூறு நூல்கள் எழுதிய வருமான திரு. என். குழந்தைவேலு என்ற இயற்பெயரையுடைய திரு. என். கே. வேலன் அவர்கள் சென்னையில் 30—12—79 ஞாயி றன்று இரவு 11-30 மணியளவில் மறைவுற்றுர். இறுதியாக உடல் நலம் குன்றிய நிலையில் மயிலை இசபெல்லா மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பெற்றிருந்தார். ஓரிரு நாட்கள் மருத்துவமனையில் போதிய மருத்துவ உதவி பெற்றும் அவர் மீளாத்துயிலில் ஆழ்ந்தார்.



குழந்தை இலக்கியம் என்ற துறை மலரத் தொடங்கிய நிலையி லேயே குழந்தைகட்காகக் கதைகள், கட்டுரைகள், அறிவியல் நூல் கள் படைக்கத் தொடங்கியவர் திரு. வேலன் அவர்கள். இந்த ஊழி அறிவியல் ஊழியாகும். நாளுக்கு நாள் மேனுடுகளில் புதிய புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் தோன்றிக்கொண்டே யிருக்கின்றன. வானத்திலிருக்கும் நிலவை நிலவுலகிலிருந்தே கண்டுகளித்துக் கொண்டிருந்த மனிதன் இன்று நிலவில் காலடி எடுத்து வைத்து விட்டான். இவ்வாறு மேற்கே மெத்த வளரும் அறிவியல் கலையை அழகு தமிழில் இனிய எளிய நடையில் தமிழ்ச் சிறுவர்களுக்கு அறிமுகப்படுத்திய பெருமைக்குரியவர் திரு. வேலன். அவருடைய மறைவு தமிழ்ச் சிறுவர் இலக்கியத்திற்குப் பேரிழப்பாகும்.

'எம் மொழியினும் நந்தமிழ் மொழியே சிறந்தது' என்பதை உலகிற்கு எடுத்துணர்த்திய தமிழறிஞர் பா. வே. மாணிக்க நாயக்கர்தம் உடன்பிறந்தாளின் மகனுராகிய வேலன் தம் தாய் மாமனுரைப் போலவே தமிழ்மொழியின்மீது ஆர்வம் கொண்ட தோடு தமிழில் புதுப் புதுத் துறைகளில் நூல்களைப் படைத்ததும் போற்றுதற்குரியது.

சேலத்திற்கடுத்த பாகற்பட்டி என்னும் ஊரில் 1907இல் திரு நமசிவாய பிள்ளைக்கும் மரகதம் அம்மையார்க்கும்

தலைமகனாராகத் தோன்றியவர் திரு. வேலன். அவருக்கு இரண்டு பெண்மக்களும் மூன்று ஆண்மக்களும் தோன்றினர்.

சேலம் முனிசிபல் கல்லூரியில் இளங்கலைப் படிப்பை முடித்த பின், சென்னை மாநிலக் கல்லூரியில் சேர்ந்து பி. ஏ. பட்டம் பெற்றார். தமிழக அரசுக் காவல்துறையில் பணியாற்றப் புகுந்த இவர் வேலூர் காவல்துறைப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்ற பின் முதன் முதலாகத் திருநெல்வேலி மாவட்டத்தில் கங்கை கொண்டான் காவல் நிலையத்தில் துணை ஆய்வாளராகப் பொறுப் பேற்றார்.

அவ்வமயம் கழகத்தை நிறுவியவரும் கழக ஆட்சியாளர் செந்தமிழ்ச் செல்வர் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களின் தமையனாருமான திரு. வ. திருவரங்கம் பிள்ளை அவர்கள் திரு. வேலன் அவர்களைச் சந்தித்து நூல் எழுதுமாறு தூண்டுதல் செய்தார். அதற்கிணங்கியே வேலன் அவர்கள் எழுத்துப்பணியில் ஈடுபட்டார். அதன் பயனாகத் தமிழுக்கு ஏராளமான பயனுடைய நூல்கள் கிடைத்தன.

தாம் எழுத்துத் துறையில் ஈடுபட்ட கருத்தினைத் திரு. வேலன் அவர்களே கழக ஆட்சியாளர் அவர்களின் 'பவளவிழா மலரில்' (1973) கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்:

> "சற்றேறக்குறைய 35 ஆண்டுகளுக்குமுன் ஒருநாள் திருவரங்கம் பிள்ளை அவர்களும் நீலாம்பிகை அம்மையார் (மறைத்திரு மறைமலையடிகளாரின் மகளார்) அவர்களும் எங்கள் வீட்டிற்கு வருகை தந்தனர். 'அறிவியல் கருத்துக் களைத் தமிழில் எழுதுங்கள்; தமிழுக்குத் தொண்டு செய்தது போலாகும்' என்றார்கள். 'காவல் துறையில் பணியாற்றுகின் றேன் எனக்கு ஏது' என்றேன். 'தமிழுக்காக அரை மணி நேரம் ஒதுக்கிவைக்கக் கூடாதா?' என்று கேட்டார்கள். 'ஒரு நாளைக்கு அரைப் பக்கமாவது எழுதுங்கள்' என்று அம்மை யார் வற்புறுத்தினார்கள். அன்று தொடங்கி ஓய்வு கிடைத்த போதெல்லாம் கட்டுரைகள் எழுதி வந்தேன்."
>
> "மேலும் என்னைத் தூண்டுவதற்குத் தாமரைச் செல்வர் சுப்பையா பிள்ளை அவர்கள் வந்தார்கள்."

இவ்வாறு எழுத்துப் பணியில் ஈடுபட்ட திரு. வேலன். புதியது புனைந்த அறிவியல் அறிஞர், இயற்கையும் செயற்கையும், மண்ணும் விண்ணும் போன்ற அறிவியல் கட்டுரை நூல்களையும், 'மின்சாரத் தின் கதை', 'காற்றின் கதை', 'அணுவின் கதை' போன்ற அறிவியல் உண்மைக் கதை நூல்களையும் படைத்தார்.

கதை, கட்டுரை மட்டுமல்லாது தொழில் தந்தையர், பா. வே. மாணிக்க நாயகர் போன்ற வாழ்க்கை வரலாற்று நூல்களையும் ‘விதியை வெல்லுதல்’ ‘தமிழ் எழுத்துக்களின் நுண்மை விளக்கம்’ ‘கலிவரின் யாத்திரைகள்’ ‘பூமிக்குள் பயணம்’ போன்ற மொழி பெயர்ப்பு நூல்களையும், சோழர் ஆட்சி, சேரர் ஆட்சி, நாயக்கர் ஆட்சி, பாண்டியர் ஆட்சி போன்ற நாட்டு வரலாற்று நூல்களையும் ‘நம் நாட்டுத் தேர்தல் முறை’ என்ற அரசியல் நூலையும் ‘முருகன் திருவருள்’ என்ற சமய நூலையும் இவர் ஆக்கித் தந்துள்ளார். இவ்வாறு கட்டுரை, கதை, அரசியல், வரலாறு, சமயம், அறிவியல் போன்ற துறைகளில் ஏறத்தாழ நூறு நூல்களைப் படைத்துள்ள துடன் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகச் ‘செந்தமிழ்ச் செல்வி’ யில் அறிவியல், சமய, தமிழுணர்வுக் கட்டுரைகளையும் விடாது எழுதி வந்துள்ளார்.

இந்த இதழில்கூட அவர் இறுதியாக எழுதிய ‘வானுலகத் தொடர்பு’ என்ற அறிவியல் கட்டுரை வெளிவந்துள்ளது.

மறைவதற்கு ஒரு கிழமைக்கு முன்னர்கூடக் கழக ஆட்சியாள ரிடம் ‘‘தீயணைப்புப் படை’ பற்றி நூல் எழுதித் தருகிறேன். அதற்குப் பயன்படக் கூடிய கருவி நூல்களைத் தொகுத்து அனுப் புங்கள்’’ என்று குறிப்பிட்டார்கள்.

வாழ்க்கைப் பொருளீட்டத் துணைநின்ற காவல்துறையி லிருந்து உரிய காலத்தில் ஓய்வு பெற்ற அவர்கள் இறுதிவரை எழுத்துப் பணியிலிருந்து ஓய்வு பெறவேயில்லை யென்பதை நன்கு உணரலாம்.

இவர்தம் நூல்கள் பல அறிஞர்களால் போற்றப்பெற்றிருப்ப துடன் சில அரசினர், எழுத்தாளர் சங்கப் பரிசுகளையும் பாராட் டையும் பெற்றுள்ளன.

இவர் எழுதிய ‘மின்சாரத்தின் கதை’, ‘நிலவைச் சுற்றிய கதை’, ‘சென்னைச் சிலைகளின் கதை’ ஆகிய மூன்று நூல்களும் தமிழக அரசின் பரிசுகளைப் பெற்றுள்ளன. ஒவ்வொன்றுக்கும் ரூ. 500ம் பரிசுத் தொகையாகக் கிடைத்துள்ளது.

குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய போட்டியில் இவர் தம் ‘மாமாவின் ஆராய்ச்சிகள்’ என்ற நூல் பதக்கம் பரிசு பெற்றது. அதுவே அச்சான பின் தமிழக அரசின் ரூ. 500 பரிசையும் பெற்றது.

இவர் எழுதிய ‘அணுவின் கதை’ என்ற நூலைப் படித்த நூலகப் பேரறிஞர் டாக்டர் எஸ். ஆர். அரங்கநாதன் அவர்கள்

'அணுவைப் பற்றித் தமிழில் இவ்வளவு எளிமையாக எழுத முடியும் என்பதைப் பார்க்கும்போது ஆசிரியரின் எழுத்தாற்றலைப் பாராட்டுகிறேன்' என்று புகழ்ந்தார்கள்.

எழுத்துத் துறையில் இவர் பல வெற்றிகளைப் பெற்றதைப் போலக் காவல்துறைகளிலும் பல உயர்வுகளைப் பெற்று மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் பதவியினின்றும் ஓய்வு பெற்றார். ஓய்வு நிலையிலும் நெல்லை மாவட்டத்திலுள்ள 'தாரங்கதாரா உரத் தொழிற்சாலை'யில் ஆறு ஆண்டுகள் பாதுகாவல் அதிகாரியாகப் பணியாற்றினர். உடல் தளர்ந்த நிலையில் அதனின்றும் ஓய்வு பெற்றார். திரு வேலன் காவல் துறையதிகாரியாக இருப்பினும் இளகிய மனம் படைத்தவர். எல்லோரிடமும் இன்முகத்துடன் பழகுபவர். அனைவரிடமும் அன்பாகப் பழகுவார்கள்.

நீங்காத சமயப்பற்று உடையவர்கள். முருகன்பால் இவருக்கு மாறாத காதல் உண்டு. திருக்கோயில்களுக்கு அடிக்கடி சென்று வழிபட்டு வருவார். சமயச் சொற்பொழிவுகள், புராண இசை நிகழ்ச்சிகள் ஆகியவற்றுக்கு, ஓய்வு பெற்றபின் தவறாது சென்று வருவார் அவற்றில் தமிழைப்பற்றி யாரும் குறையாகப் பேசி விட்டால் உடனே வருந்தி அது பற்றிச் செந்தமிழ்ச் செல்விக்குக் குறிப்பு எழுதியனுப்புவார். தமிழ்மீது அவ்வளவு பேரீடுபாடு.

இவருக்கு ஆண் மக்கள் நால்வரும் பெண் மக்கள் நால்வரும் உளர். இவர் தம் இரண்டாம் துணைவியார் சென்னை மாநகராட்சிப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார். முதல் மனைவியார் 25 ஆண்டுகட்கு முன் மறைவுற்றார். அவர்வழி பெற்ற மக்கள் அறுவர்.

இறுதிக் காலத்தில் இடமாற்றத்திற்காகத் தம் இரண்டாம் மகன் திரு. பாலு அவர்களுடன் இருப்பதற்குச் சென்னையிலிருந்து அடிக்கடி வேலூர் சென்றுவிடுவார்கள். அவ்வமயங்களில் கழக ஆட்சியாளர் அவர்கள் "வேலன் அவர்கள் வேலூர் சென்றுள்ளார், வந்தவுடன் பார்ப்போம்" என்று கூறுவதுண்டு. இப்போது வேலன் அவர்கள் வேற்றூருக்கே சென்றுவிட்டார்கள். இவர்களுடன் நெருங்கிப் பழகிய ஆட்சியாளர் அவர்கள் இவர் பிரிவால் பெரிதும் வருந்துகின்றார்கள். இவர் பிரிவை யாற்றாது வருந்தும் இவர்தம் குடும்பத்தார்க்கும் ஆட்சியாளர் போன்ற நெருங்கிய நண்பர்கட்கும் ஆண்டவன் மன அமைதியைத் தருவானாக. இவர் தம் ஆன்மா இவர் என்றும் போற்றி வழிபட்டு வந்த முருகன் திருவடிகளில் அமர்ந்து இன்புறுவதாக.

———

குழந்தை இலக்கிய உலகிற்குப் பேரிழப்பு

"திரு. என். கே. வேலன் அவர்களின் மறைவு கேட்டு அதிர்ச்சி அடைந்தேன். எந்தப் பொருளை எடுத்துக்கொண் டாலும், எளிமையும், இனிமையும் தெளிவும் இருக்கும்படி எழுதும் ஆற்றல் பெற்ற திரு. என். கே. வேலன் அவர்களை இழந்தது தமிழ் உலகிற்கு—அதிலும் குழந்தை இலக்கிய உலகிற்குப் பேரிழப் பாகும்."

அழ. வள்ளியப்பா

குழந்தை எழுத்தாளர் சங்கத் தலைவர்

கழக நூலாசிரியர்
புலவர் 'அரசு' அவர்கள் மறைவு

கழக நூலாசிரியர்களில் ஒருவரும், பூவிருந்தவல்லியில் மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியராகவிருந்து ஓய்வு பெற்றவரும், பல உரைநூல்கள், வரலாற்று நூல்களின் ஆசிரியரு மான புலவர் 'அரசு' அவர்கள் 16—12—79இல், தமது 79 ஆவது அகவையில், நாகர்கோயிலில் இறை யடி சேர்ந்தார்கள் என்ற செய்தி யறிந்து வருந்துகிறோம்.



திரு புலவர் 'அரசு' அவர்கள் 1920—24இல் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற் பயின்று பிரவேசபண்டி தத்தேர்வில் முதல்வராகத் தேர்ந்து பொற்பதக்கம் பரிசு பெற்றார். 1924 இல் செங்கற்பட்டு மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளிகளில் பணியாற்றிய பின் 1929இல் சிதம்பரம் மீனாட்சி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்றார். 1937இல் சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் தேர்வில் தேர்வு பெற்றார். பின்னர்ச் சில ஆண்டுகள் தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் துணையாசிரியராகப் பணியாற்றினார். இவர் இயற்றிய 'அமர சிங்க விஜயம்' என்னும் புனைகதை 1937–38 இல் பி. ஏ. வகுப்புக்குப் பாடமாக வைக்கப்பட்டது. இவர் இயற் றிய பல உரைநூல்களும், வரலாற்று நூல்களும் நாடக நூல்களும் கழகவழி வெளிவந்துள்ளன. இவர் நல்ல கவிதைகள் புனையும் ஆற்றல் பெற்றவருமாவர்.

மறைந்த புலவர் 'அரசு' அவர்களின் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஆப்பிரிக்கத் தக்கார் பல்கலைக் கழகத்தில் தமிழ் டாக்டர் தாயம்மாள் அறவாணன் அமர்த்தம்

செனகால், மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள ஒரு நாடு. தக்கார் என்ற கடற்கரைத் துறைமுகப்பட்டினம் இதன் தலைநகரம். இந்நகரில் உள்ள புகழ்பெற்ற தக்கார் பல்கலைக் கழகம் முதன் முறையாகத் தமிழை இலக்கியத்துறையில் அறிமுகப்படுத்தியுள்ளது. பிரெஞ்சு பயிற்று மொழியாகவும், முதன் மொழியாகவும் இருக்கும் இந்நாட்டுப் பல்கலைக்கழகத்தில் தமிழ் இரண்டாம் மொழியாகப் பயிற்றுவிக்கப் படும். தமிழைப் பயிற்றும் பேராசிரியராக டாக்டர் தாயம்மாள் அறவாணன் அமர்த்தப்பெற்றுள்ளார்.



தமிழர்க்கென இல்லாமல் தமிழுக்கு எனவே, இங்குத் தமிழ் அறிமுகம் ஆகியுள்ளது. இங்குத் தமிழர் குடியிருக்கவில்லை என்பதும், பயில இருக்கும் அனைவரும் ஆப்பிரிக்கர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆப்பிரிக்கக் கண்டத்தில் ஐம்பத்தொரு நாடுகள் உள்ளன. தென்னாப்பிரிக்காவிலும், மொரிஷியசுத்தீவிலும் தமிழர் ஆயிரக்கணக்கில் உள்ளனர். இருந்தும், இதுவரை ஆப்பிரிக்கப் பல்கலைக்கழகம் எதுவும் பல்கலைக் கழக அளவில் தமிழை அறிமுகப்படுத்தவில்லை. ஆப்பிரிக்கக் கண்டத்திலேயே முதன்முறையாக, முதல்நாடாக, செனகால் நாடு, தமிழைப் பல்கலைக்கழக அளவில் பயிற்றுவிக்கிறது.

இதற்கு முழுக்காரணர், இந்நாட்டு அதிபர் டாக்டர் செங்கோர் ஆவார். பல சிறந்த நூல்களின் ஆசிரியரும், மிகப் புகழ்பெற்ற பிரெஞ்சுமொழிக் கவிஞரும் ஆகிய செங்கோர், தமிழ்மொழி மேலும், தமிழ்ப்பண்பாட்டின்மீதும் பேரார்வலர். பேரறிஞராகிய இவர் 1974இல் சென்னைக்கு வருகை தந்தார். 1980இல் மதுரையில் நிகழ இருக்கும் உலகத் தமிழ் மாநாட்டிலும் கலந்துகொள்ள இசைந்துள்ளார்.

திராவிட மொழிகளுக்கும், ஆப்பிரிக்க மொழிகளுக்கும் இடையே ஒற்றுமைகள் உள்ளன என்பது பிரஞ்சு அறிஞர்களால் முதன்முதல் கண்டறியப்பட்டது. பின்பு பழக்கவழக்கப் பண்பாட்டு அளவிலும், ஒற்றுமைகள் அறியப்பட்டு இது தொடர்பான ஆய்வு, தக்கார் பல்கலைக் கழகத்தில் இணைப்பாக இயங்கும் ஆப்பிரிக்க அடிப்படை ஆய்வகத்தில் (IFAN) நிகழ்ந்து வருகிறது. மொழிகளுக்கு இடையே உள்ள ஒற்றுமைகள்பற்றி அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறை ஆய்வு நடத்தி வருகிறது.

பேராசிரியராகப் பொறுப்பேற்றிருக்கும் டாக்டர் தாயம்மாள் அறவாணன் அவர்கள் வாழ்க்கைக் குறிப்பு :

பிறப்பு : 23—5—1944. படிப்பு : எம்.ஏ. பி.எச்.டி.

பட்டறிவு : பச்சையப்பன் நிறுவனமான சென்னை-செல்லம்மாள் மகளிர் கல்லூரியில் துணைப் பேராசிரியர் (தற்போது விடுப்பில் உள்ளார்)

படைப்பு : பெண்மொழி, புதிய கோலங்கள் முதலான நூல்கள்.

பயணம் : அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி, சப்பான், சிங்கப்பூர், மலேசியா, ஆங்காங், மேற்குச் செருமனி, செனகால், காம்பியா ஆகிய நாடுகள்.

செய்திகளும் குறிப்புக்களும்

இந்தியத் துணைக் கண்டத்தின் 7ஆவது பொதுத் தேர்தல் முடிவுகள்

இரண்டரை ஆண்டுக்கால சனதா அரசின் முடிவினையொட்டி இத் திங்கள் 3, 6ஆம் நாள்களில் இவ்விந்தியத் துணைக்கண்டத்தின் 7ஆவது நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் நடந்து முடிந்தது. இத் தேர்தலில் திருமதிஇந்திராகாந்தி அம்மையார் தலைமையிலுள்ள பேராயக் கட்சி(congress-I) சனதா கட்சி, பேராயக்கட்சி-2. (congress-u) மக்கள் கட்சி, மற்றும் சில மாநிலக் கட்சிகளான அகாதலிதளம், திராவிட முன்னேற்றக்கழகம், அ இ. அ. திராவிட முன்னேற்றக்கழகம் ஆகியன போட்டியிட்டன. இவற்றுள் திருமதி இந்திராகாந்தி அம்மையார் தலைமையிலுள்ள பேராயக்கட்சிக்கு மூன்றில் இரண்டுபங்குப் பெரும் பான்மை கிட்டியுள்ளது. எனவே மீண்டும் இவ்விந்தியத் துணைக்கண் டத்தில் அம்மையாரின் நல்லாட்சி மலர்வது கண்டுமகிழ்ச்சியடைகிறோம். அவர்கட்கு எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழகப் புலவர்குழு வேண்டுகோள்

தமிழகத்திலும், பிற மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் உள்ள தமிழ்மக்கள் வாழும் இடங்களிலெல்லாம் இருக்கின்ற தமிழ்ச் சங்கங் கள், தமிழ் மன்றங்கள், திருக்குறள் சங்கங்கள், தமிழர் சங்கங்கள், முத்தமிழ் மன்றங்கள், கல்வி நிலையங்கள் ஆகிய அனைத்தும், மார்கழி 30 இல் துவங்கி முறையே போகிப்பண்டிகை, தைப்பொங்கற்பெருநாள், திருவள்ளுவர் திருநாள், உழவர் திருநாள், இயல்—இசை—நாடகத் தமிழ்த்திருநாள்கள் என ஏழு நாள்களும் தமிழர் திருநாள்களாகக் கொண்டாடித் தமிழ்மொழி—இனம்—நாடு ஆகியவற்றின் மாண்புகளைப் பொதுமக்கட்கு விளக்கும்படி தமிழகப் புலவர்குழு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆறுமுக நாவலர் 100வது குருபூசை விழா

திருப்பெருந்திரு ஆறுமுக நாவலர் பெருமான் 100வது குருபூசை விழா, 10 12 79இல் சிதம்பரத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ் விழாவினையொட்டிப் போட்டிகள் பல நடைபெற்றன. வெற்றி பெற்றவர்கட்குப் பரிசுகள் வழங்கப்பெற்றன.

பாவலர் பெருஞ்சித்திரனாரின் தந்தையார் மறைவு

'தென்மொழி' ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் தந்தையார் திரு. இரா. துரைசாமி அவர்கள் 5—12—79 இல் தமது 72வது அகவையில் சேலத்தில் காலமானார்கள் என்ற செய்தியறிந்து வருந்துகிறோம். திரு. பெருஞ்சித்திரனார் அவர்கட்கும், அவர்தம் குடும்பத்தார்க்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை

(செல்வி சிலம்பு ருச-உகசஆம் பக்கத் தொடர்ச்சி)

மாண்புமிகு அமைச்சர் இராம வீரப்பன்	1000	00
உயர்திரு. K. V. கந்தசாமி, M.L.A.	401	00
,, வ. சுப்பையா பிள்ளை, கழக ஆட்சியாளர்	10	00
,, இரா. சுந்தரம் பிள்ளை, கழகச் செயற்குழு உறுப்பினர்	10	00
,, பாஸ்கரன், சென்னை-88	10	00
,, புலவர் பொ. முனியப்பன், கூகலூர்	10	00
,, பேரா. ஆ. சிவலிங்கனார், சென்னை 20	5	00
,, ஆ. சுப்பையா பிள்ளை, கழக மேலாளர்	5	00
,, அரு. இராசசேகரன், சென்னை-1	5	00
,, நா. தண்டபாணி, பூங்குடி	5	00
,, அண்ணலார் சுப்பிரமணியம், புதுக்கோட்டை	10	00
,, T. C. ஜெகன்னாதன் செட்டியார், ஆலத்துடையாள் பட்டி	10	00
,, A. T. A. ஈஸ்வர், சென்னை	5	00
,, சு. வேங்கடராமன், தமிழ்த்துறை, மதுரைப் பல்கலைக்கழகம்	25	00

மதிப்புரை

வடமொழி இலக்கிய வரலாறு

ஆசிரியர்: *நவாலியூர் நடராசன்.* **வெளியீடு:** *சங்கிதா பதிப்பகம், 22, நீலகண்ட மேதா தெரு, தி. நகர், சென்னை-17. பக். 366.* **விலை** *ரூ. 14-00.*

வடமொழி இலக்கிய வரலாற்றை வரன்முறையே எளிதில் புரிந்து கொள்ளுமாறும் அதன் பரப்பினை அறிந்துகொள்ளுமாறும் இந் நூல்

செய்கின்றது. இவ்வாசிரியர்தம் தமிழ்ப்புலமை இவர் எடுத்துக் கொண்டுள்ள வரலாற்றை இயக்குதற்கு நன்கு உதவுகின்றது. இவர்தம் பாட்டியற்றும் ஆற்றல் ஆங்காங்கே பளிச்சிடுகின்றது.

"வேதப்பாசுரங்களில் பல தமிழ்ச் சொற்களும் ஆங்காங்கு விரவி வருவது ஆராய்ச்சி செய்வோர்க்குக் கவர்ச்சியூட்டும்" என்று இவர் குறிப்பிடுகிருர். இவ் வுண்மையுணர்வு பாராட்டுக்குரியது. வள்ளுவர் பொருட்பால் அர்த்த சாத்திரத்தின் வழிப்பட்டது என்று மயங்கிப் பிதற்றினோர், இவர்தம் அர்த்த சாத்திரப் பகுதியைப் படித்தால் தம் மயக்கம் தெளிந்து உண்மை காண்பர். (352--3) பொன்னும் பொருளும் போகமும் (33) அடுப்பாரும் தொடுப்பாரும் (132) செங்நெறிக் காலம் (113) வைதாரையும் வாழ வைத்தல் (33) அடக்கம் அமரருள் உய்க்கும் (142) இன்னவாருய் வருவன இவர்தம் தமிழோட்டத்திற்குச் சான்றுகள்.

இவர் 'கொடிநிலை கந்தழி வள்ளி' என்பவை "பிற்காலத்துப் பிரம்ம விட்ணு உருத்திர விவகாரத்துக்குக் குறிப்பாக இருக்கலாம்" என்பது ஆய்வுமுறைப்பட்டதன்று (42)

சிறப்புப் பெயர் அகரவரிசை பின்னிணைப்பாக இணைக்கப் பெற்றிருக்கலாம். பிழைகளைக் களைந்திருக்கவேண்டும். வடமொழி இலக்கிய வரலாற்றை அறிந்துகொள்ள விரும்புவார்க்கு இந்நூல் இனிய துணையாகும். பயன் கொள்ளவேண்டிய நூல். —இரா. இளங்குமரன்

புதிய தமிழகம்

[ஆசிரியர்: கவியோகி சுத்தானந்த பாரதியார், யோக சமாஜம், அடையாறு, சென்னை-20, விலை ரூ. 3-00]

தமிழகத்தின் சிறப்பு, தமிழ் இலக்கியங்களின் மாண்பு, பண்டைத் தமிழரின் கலை, அரசியல், நாகரிகம், வீரம், காதல் ஆகியன பற்றியும் தமிழர் மறுமலர்ச்சி பெற்றுப் புதிய தமிழகத்தை உருவாக்க வேண்டிய தன் இன்றியமையாமையினையும். இனிமையும் எளிமையும் கூடிய செய்யுள் நடையில் கூறுகிருர் இந் நூலாசிரியர். தமிழர் உணர்ச்சி பெற - உயர்வு பெற இந் நூல் தக்க வழிகாட்டியாகும்.

வரப்பெற்ருேம்

(1) திருச்செந்தூரந்தாதி விலை ரூ. 1-00
(2) திருவனந்தை வெண்பாவந்தாதி விலை ரூ. 1-00
(3) நன்று நாற்பது விலை 50 காசு

ஆசிரியர்: கவிராச பண்டித இராம சுப்பிரமணிய நாவலர்.
வெளியீடு: செந்தமிழ் நிலையம், நாகர்கோயில்-2

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 80, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா

பதிவு எண் : M. 4899

புதிய தமிழ் வெளியீடுகள்

நாவல்கள்	ரூ.	பை.
1. விநோதினி (வங்காவல்) (இரண்டாம் பதிப்பு)	10	50
2. பொம்மலாட்டம் (வங்காவல்)	14	00
3. பண்டித பரமேஸ்வர சாஸ்திரி உயில் (தெலுங்கு நாவல்)	10	50
4. பேராசிரியர் (மலையாள நாவல்) (இரண்டாம் பதிப்பு)	5	00
5. பொலிவு இழந்த போர்வை (உருது நாவல்) (இரண்டாம் பதிப்பு)	5	00

சிறுகதைகள்

1. பீகார் மாநில நாட்டுக் கதைகள்	8	00
2. மராத்திச் சிறுகதைகள்	18	00
3. மலையாளச் சிறுகதைகள்	10	00

கவிதைகள்

1. தமிழ்க் கவிதைக் களஞ்சியம் (மூன்றும் பதிப்பு)	15	00
2. பாரதியார் இன்கவித்திரட்டு (இரண்டாம் பதிப்பு)	5	00

இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசை

ஒவ்வொன்றும் 2 50

1. பி. எம் ஸ்ரீ கண்டய்யா,
2. சந்துமேனன்,
3. வள்ளத்தோள்,
4. வேமனர்
5. மீராபாய்
6. வீரேசலிங்கம்
7. பசவேஸ்வரர்,
8. பாணபட்டர்
9. காஸிநஸ்ருல் இஸ்லாம்
10. பங்கிம் சந்திரசாட்டர்ஜி

இலக்கிய வரலாறு

1. கன்னட இலக்கிய வரலாறு	20	00
2. அஸ்ஸாமிய இலக்கிய வரலாறு	12	00

சாகித்திய அக்காதெமி

புதுதில்லி - கல்கத்தா

சென்னை - பம்பாய்

தென்மண்டல அலுவலகம்

29, எல்டாம்ஸ் சாலை, சென்னை-600 018.

அப்பர் அச்சகம், சென்னை-1.